தோழன்

ஆசிரியர்- ஏ.பி.ஜனார்த்தனம், எம்.ஏ.

42
003

தோழன்

ஆசிரியர்: A. P. ஜனார்த்தனம், M.A.

மலர் 1 | சென்னை 15—7—47 | இதழ் 1

உள்ளடக்கம்

நமது நோக்கம் ....
ஜூலை 1 ....
சோவியத் நாட்டிலே
சம்மட்டியார் ....
சாமியும் சமயமும் ....
பெரியாரும் லெனினும்
பக்த மீரா ....
அன்று பிறந்த நாதம்!
இந்தியா ....

கலியாண

சீஸனுக்காக

உயர்ந்த
நேர்த்தியான
சரக்குகளையே
நாங்கள்
விற்பனை
செய்கிறோம்

★

உங்களது மனதிற்கேற்ற நவீன பட்டு
ஜவுளி தினுசுகள் ஏராளமாக வந்துள்ளன

★

இன்றே ஒருமுறை
விஜயம் செய்து
உங்களுக்குப்
பிடித்தமானதை
தேர்ந்தெடுத்துக்
கொள்ளுங்கள்

ஆரணி
ஸில்க் ஹவுஸ்
4, சன்னதித் தெரு, மயிலாப்பூர்
சென்னை :: போன்: 86349

தோழன்

மாதம் ஒரு முறை

தனிப்பிரதி நான்கணா   ஆண்டுச் சந்தா 3 ரூபாய்

மற்ற விபரங்களுக்கு

தோழன் அலுவலகம்
10, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நமது நோக்கம்.

திராவிடம் பிரிட்டிஷ் சிங்கத்திடமிருந்து ஆகஸ்டு 15-ல் விடுதலை பெறப் போகிறது. ஆனால் வடநாட்டு வேங்கை பாயத் தயாராகி விட்டது. இந்த ஆபத்தான கட்டத்திலே 'தோழன்' தொடங்குகிறான் தனது பயணத்தை. திராவிட நாடு வடநாட்டு வேங்கையிடமிருந்து விடுபட திராவிட கழகம் பாடுபடுகிறது. அந்தக்கழகக் கொள்கைகளை, நோக்கங்களை விளக்குவது 'தோழன்' முதற் கடமை.

மடமையும், இன்னலும், இழிவும் மிகுந்த நாட்டில் பகுத்தறிவுக் கருத்துகள் மிகவும் பரவ வேண்டும். கற்க ளெல்லாம் சாமிகள், பூனையும் பல்லியும் மிரட்டும் ஜந்துக்கள் என்று எண்ணியுள்ள மக்களிடையே அறிவுக் கருத்துக்கள் பரவ வேண்டும். புராணம், இதிகாசம், சாத்திரம், இவை யாவும் நம் இனத்தை இழிவுபடுத்தும் கருவிகள். இவை களிலுள்ள ஊழல்களை வெளிப் படுத்தினால் உறுமுகின்ற னர், தன் இனத்தை மறந்து மாற்றான் மயக்கிலே சொக்கிய சில பெரியார்கள். அவர்களுக் கெல்லாம் தெளிவு பிறக்க வேண்டும் என்பது தான் நமது ஆசை. சுயமரியாதை இயக் கம் சுடச்சுட பதில் தந்து வந்திருக்கிறது. அந்த இயக்கம் ஒன்று தான் ஆரியத்தை அறைகூவி அழைக்கிறது—அறி வுப் போருக்கு. மிக வேகமான கருத்துக்களை, பிறர் பயந்த நேரத்தில் நாட்டில் பரப்பிய பெருமை அந்த இயக்கத்துக்குத் தான் உண்டு. வைதீக அரண்களைத் தகர்த்தெறிந்து, பகுத் தறிவு குண்டுகளை வீசி, பழமை கோட்டைகளைப் படுசூரண மாக்கியதும் இந்த இயக்கமே. இந்த இயக்கத்தின் கொள்கை களை பரப்புவதில் 'தோழனுக்கு' மகிழ்ச்சி இருக்கும்.

'புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும் புதரினில் தூங்குவதா' என்று கேட்கிறார் புரட்சிக் கவிஞர். ஆம், முதலாளி நரிகள் பாட்டாளிப் புலிகளின் தீனியை எடுத்து ஏப்பமிடுகின்றன. இந்த நிலை மாற வேண்டும் என்பது தான் 'தோழன்' கருத்து. திராவிட இனமே (ஓர் சிலரைத் தவிர) பாட்டாளி இனம். அந்தப் பாட்டாளிகள் முன்னேற்றத்திற்கு 'தோழன்' உழைக்கும். 'தோழன்' என்ற சொல்லை முதன் முதலில் திராவிடத்தில் கையாண்டவர்கள் சுயமரியாதைக் காரர்கள்.

திராவிட மாணவர் உலகம் தற்போது தான் காந்திய மயக்கத்தினின்றும் விடுபட்டுவருகிறது. வருங்காலத்தை உருவாக்கக்கூடிய மாணவர்களிடை பகுத்தறிவுக் கருத்துக் களை பரப்பி அவர்களை பழமையின் வைரிகளாக, புதுயுகச் சிற்பிகளாக மாற்ற 'தோழன்' பாடுபடும்.

தாழ்த்தப்பட்டோர், பெண்கள் ஆகியவர்களின் விடுதலை மிகவும் தேவை. அவர்களுக்கு உரிமை தராதவரை விடுதலை யும் கெடுதலையும் ஒன்றே. 'தோழன்' இதற்கு வேலை செய்யும். 'தோழனை' வெளியிடும் முயற்சியில் ஒத்து ழைத்த அனைவருக்கும் எமது வணக்கம். அறிவியக்கத் தந்தை பெரியாரவர்களுக்கும், புரட்சிக் கவிஞருக்கும் தள பதி அண்ணா அவர்களுக்கும் எமது நன்றி! மற்றும் குறிப் பிடத் தக்கவர்கள் வந்தவாசி தோழர் T. சீனிவாசன், தோழர். K. G. ராதா ஆவர்.

ஜூலை—1.

'சிந்து மாகாணத்திலுள்ள பிரபல இந்து வியாபாரிகள் மூட்டைகட்டுகின்றனர்.'

'லாகூரிலிருந்த பாங்கிகள டில்லிக்கு வந்து விட்டன.'

'இந்துக்களின் மூலதனம் கோடி கோடியாக பாகிஸ் தானத்திலிருந்து ஓடுகிறது.'

மேற்கூறியவை பத்திரிகைச் செய்திகள். பாகிஸ்தானம் ஏற்பட்டவுடன் இந்து வியாபாரிகள் தங்கள் வாணிபத்துக்கு இனி சலுகை இராது, சுரண்டல் செல்லாது, இஸலாமியர் இனி உறங்கார் என்பதை யறிந்து இந்து பகுதிகளுக்கு குடி யேறுகின்றனர். வடமேற்கு எல்லைப் புறம், பாஞ்சாலம், சிந்து, வங்காளம் ஆகிய இடங்களிலெல்லாம் குஜராத்தி களும், மார்வாடிகளும் இதுவரை வாணிபத்துறையில் தலை சிறந்து விளங்கினர். பாகிஸ்தான் ஏற்பட்டதும் இஸ்லாமியர் தொழில்கள், வாணிபம் ஆகிய துறைகளில் முன்னேறுவர், சர்க்கார் சலுகைகளுடன், என்பதையறிந்து வெளியேறு கின்றனர்.

அப்படி இந்துக்கள் வேறு இடங்களுககு வெளியேற எண்ணும் நேரத்தில் அவர்கள் சிந்தனையெல்லாம், இனி எந் தப்பிரதேசத்தில் வியாபாரத்தை நடத்தலாம், எந்தப் பகுதி யில் நல்ல மார்க்கெட் உண்டு என்பதில் ஈடுபடும். வடநாட் டில் ஏற்கனவே பெரிதும் அவர்கள் பரவியிருக்கிறார்கள். எனவே அவர்களது எண்ணமெலாம் விந்திய மலைக்கு தெற்கே தான் செல்லும். காரணம், விந்திய மலைக்கு தெற்கே தான் 4½ கோடி மக்கள் (சிலரைத்தவிர) வடநாட்டை கைலா

யம் என நினைப்பவர்கள், உயிர் தந்த குமரனையும் வ. உ. சிதம்பரத்தையும் மறந்து வடநாட்டாரை தியாக சிகரங்களென நினைப்பவர்கள், வடக்கிலிருந்து வந்து வதக்கி வட்டி வாங்கும் 'வள்ளல்களை' மகராஜ், 'சேட்' சாவுகார், என அழைப்பவர்கள், தாய்மொழிப்பயிற்சியையும் தள்ளிவைத்து விட்டு இந்தியில் மோகங் கொண்டவர்கள், 'வணக்கம்' வன்பதற்கு பதில் 'நமஸ்தே' சொல்லப்பழகு கிறவர்கள், தங்களுக்குள்ளாகவே தீர்த்துக் கொள்ளக் கூடிய சிறு சண்டைக் கெல்லாம் வடநாட்டாரிடம் காவடி தூக்குபவர்கள், தின்பண்டங்களுக்குக் கூட டில்லி பாதுஷா, பாம்பே அல்வா என்று பெயரிடுபவர்கள், தலைநகரின் ஒரு பகுதியே சவுகார் பேட்டையானதைப் பார்த்தும் உணர்ச்சி பெறாதவர்கள், செருப்பு, இரும்பு ஆகியவைகளுக்கு பாடாவை, டாடாவை நம்புபவர்கள், தங்கள் சாமிகள் போதாதென்று சாயிபாபாவை வழிபடுபவர்கள், டில்லியையே நோக்கித்தவங்கிடக்கும் தியாகிகள், என்பது அவர்களுக்குத் தெரியும். அது மட்டுமல்ல, நாலாயிரம் சாதிகளாகப் பிரிந்து, சாத்திரம், புராணம், இதிகாசம் ஆகியவைகளை நம்பி வெள்ளையன் சுரண்டினாலென்ன, வடநாட்டான் வந்தாலென்ன என்று கவலைப்படாதவர்கள் இருக்கும் நாடு என்று தெரியும்.

எனவே வாணிபத்துக்கு ஏற்ற இடம், நல்ல மார்க்கெட் திராவிடநாடு என்பதைத் தெரிந்து வடநாட்டு வணிகர்கூட்டம் இங்குபடையெடுத்துவிடும். சென்னைபூராவும் அவர்கள்பரவப் பரவ திராவிடருடைய வாணிபம் சீர்குலைந்து கூடும். இராஜாசர் ஆகட்டும், அழகப்பர் ஆகட்டும், அவர்களை எதிர்த்து போட்டி போடமுடியாது. வடநாட்டானுக்கு அடிமைப்பட்டு திராவிட இனம் சீரழிய வேண்டியதுதான். பிரிட்டன் கூட இவ்வளவு ஆபத்தான நிலையில் நம்மை விட்டதில்லை.

வடநாட்டு வணிகர்படையெடுப்பு, இந்தி மொழியின் ஆதிக்கம், இந்துஸ்தான் அரசியலுடன் இணைப்பு, இவை அத்தனையும் திராவிடருக்கு மிகவும் ஆபத்தானவை. இதை இன்றே தடுக்க முடியாவிட்டால் வெள்ளையரிடமிருந்து பெற்ற விடுதலை வீணாகும்.

வடநாட்டோடு தொடர்பில்லாத, வடநாட்டு ஆதிக்கத்தை வளரவிடாத திராவிட ஆட்சிதேவை யென்பது தான் திராவிடகழகத்தின் திட்டம். அதையொட்டியே திராவிட நாட்டுக்கிளர்ச்சி கடந்த சில ஆண்டு களாக நடைபெற்று வருகிறது. அது இன்னமும் வலுவடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் திராவிட நாடுபிரிவினை நாள் கொண்டாடுகிறோம். இந்த நாள் திராவிடர் வரலாற்றிலே முக்கியமான நாள். மலைபோல் எதிர்ப்புவரினும் நிலை குலையாது நம் இலட்சியத்தை நோக்கி முன்னேறுவோம். திராவிட இயக்கம் என்றால் இன்ன தென்று தெரியாத தோழர்களெல்லாம் நம்முடன் சேருமாறு உழைப்போம். விடுபட வேண்டு மென்ற உறுதி ஓர் இனத்தாருக்கு ஏற்பட்டு விட்டால், பிறகு அவர்களது முன்னேற்றத்தை தடுக்கும் சக்தி வேறெதுவும் கிடையாது. அந்த உறுதியை இன்று கைக்கொள்ளுகிறோம். மறைந்த மன்னர் பன்னீர்செல்வத்தை நினைத்து உறுதி பூணுவோம். பலி பீடத்தில் சாய்ந்த தாலமுத்து, நடராசன் ஆகியோரின் மனஉறுதியை நாமும் கைக் கொள்வோம். கால்வெட்டப் பட்டாலும், கண்ணிழந்தாலும், இலட்சியத்தைமறவாமல் தொண்டாற்றும் வீரரின் உறுதி நமக்கு ஏற்படட்டும். திராவிடத்தை தன் வாழ்நாளிலேயே மீட்டுவிடுவது என்ற பெரியாரின் உறுதி நமக்கு பெரும் ஊக்கத்தையளிக்கிறது. 'தோழன்' இந்த இலட்சியத்திற்கு உழைக்க, இந்த முக்கியமான நேரத்தில் வெளிவருகிறான்.

சோவியத் நாட்டிலே !

(T. S. வாசன்)

இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலே, 'சார்' பரம் பரையின் கடைசி மன்னன் நிக்கோலஸ், ரஷ்ய நாட்டிலே கொடுங்கோலாட்சி நடத்தினுன். மன்னனுக்காக மக்களே யன்றி, மக்களுக்காக மன்னன் அன்று என்பது நிக்கோ லஸ் கண்ட தீர்ப்பு. நீதிக்கோ, நியாயத்துக்கோ, நிக்கோ லஸ் ஆட்சியிலே இடம் கிடையாது; உண்மை, உரிமை என்ற வார்த்தைகள் ஊராள்வோனின் காதில் கேட்கப் படாதவைகள்; எப்படி, எதற்கு, ஏன் என்ற கேள்விகளுக்கு அவன் ஆட்சியிலே அர்த்தமில்லை.

ஆணவம் பிடித்த அதிகாரிகளும், மதக்குருக்களும், முதலாளிகளுமாகச் சேர்ந்து நாட்டைச் சூறையாடினர். வறுமையும், பஞ்சமும், பிணியும் நாட்டிலே தலை விரித்தா டின. மக்கள் புழுக்களாய், பூச்சிகளாய் வாழ்ந்தனர்; நடைப் பிணங்களாயினர். அவர்களுக்கிருந்த ஒரே ஒரு பிரச்சினை, இருப்பதா அல்லது இறப்பதா என்பதே.

அரண்மனை அந்தப்புறத்திலே, நிக்கோலஸ் நிம்மதி யாக காலங்கழித்தான். மது அருந்துவதும், மங்கையரு டன் சேர்ந்து மந்தகாச வாழ்க்கை நடத்துவதுமே மன்ன னுக்கு இருக்கும் வேலை யென்று எண்ணி இறும்பூதெய் தினுன். மன்னன் வாழ்வே, மக்களின் வாழ்வு என்று இறுமாந்திருந்தான். சார் பரம்பரைக்கே, ஏன்? முடியாட் சிக்கே கடைசி மன்னன் அவன்தான் என்பதை உணரா வில்லை நிக்கோலஸ்.

காரல் மார்க்ஸின் பொதுவுடமைத் தத்துவங்கள் நாட்டிலே சிறு சிறு பொறிகளாக தெறித்து ஓடிக்கொண்டிருந்தன. மார்க்ஸின் தத்துவங்களை, மாயக்காவ்ஸ்கி கவிதைகள் மூலம் நாட்டு மக்களுக்கு அளித்தான். அடிமைத்தனத்திலும், அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த மக்களுக்கு, புரட்சி யென்றாலே புரியவில்லை. ஆனால், பொதுவுடமை ஆசைமட்டும் அவர்களைவிட்டுப் பிரியவில்லை.

இங்கிலையிலே தோன்றியவன்தான் புரட்சி வீரன் லெனின். லெனில் புரட்சிக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டினான். புரட்சி வீரர்கள் இன்னும் சிலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். நாட்டின் நாலு பக்கங்களிலும் அவர்களை யேவினான். மக்களிடத்திலே புரட்சிப் பிரசாரத்தை ரகசியமாக நடத்தினர் வீரர்கள். எந்த நேரத்திலும், பெரியதோர் புரட்சி ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு வேண்டிய பண்பாட்டை, நாட்டு மக்களுக்கு அளித்து வைத்திருந்தான் லெனின்.

மங்கையர் தந்த மதுவை அருந்திவிட்டு, மன்னன் அரண்மனையிலே மலைப்பாம்பைப் போல புரண்டு கொண்டிருந்தான். வாயிலுக்கு வெளியே, புரட்சிவாடை வீசுவதை மன்னன் அறிய முடியவில்லை. அறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமுமில்லை. நீதி, நியாயம், நேர்மை இவற்றிற்கு வெற்றி நிச்சயம் என்பதை நிக்கோலஸ் அறியவேயில்லை. மக்கள் மன்னனுக்கு அடங்கி வாழ்வதே அவர்கள் கடமை, அதை மீறுவது அவர்கள் மடமை என்று எண்ணினான் மடையன் நிக்கோலஸ்.

நாட்டிலே வீசிக்கொண்டிருந்த புரட்சிவாடை, 1917ல் புரட்சிப் புயலாக மாறியது. நாட்டு மக்கள், "நாங்கள்

தயார். கட்டளை வேண்டும்,'' என்று லெனினைப் பார்த்துக் கூறினர்.

"சரி! புறப்படுங்கள்!'' என்றான் புரட்சிவீரன்லெனின். ரஷ்ய நாட்டு மக்கள் அனைவரும் போர் வீரராக மாறினர். புறப்பட்டனர் மன்னன் அரண்மனையை நோக்கி. மன்னனையும் அவனது நாயையும் வெளியே இழுத்து வந்தனர். நாயையும் மன்னனையும் ஒன்றென மதித்துக்கொன்றனர். அரண்மனை தகர்க்கப்பட்டது. அங்கிருந்த பொன்னும் மணியும் பொதுமக்களுக்குச் சொந்தமாயின. மடங்கள தரைமட்டமாயின. மதக்குருக்களின் தலைகள் உருண்டன. பணமூட்டைகள் பாட்டாளிகள் வசமாயின. பணக்காரர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். புரட்சித் தீ வேகமாக பரவியது. திக்கெட்டும் பரவியது. நாட்டைப் பிடித்திருந்த 'சனியன்கள்' ஒழிந்தன. 'நாடு இனி நமதே,' 'வாழ்க லெனின்!' என்று வாயார, மனமார வாழ்த்தினர் மக்கள்.

அன்று லெனின் ஆரம்பித்து, வெற்றிகண்ட புரட்சியிலே பூத்ததுதான் இன்று நாம் காணும் புது உலகம்; இரண்டாவது மகாயுத்தத்தின் போக்கையே மாற்றியமைத்து, உலகத்தையே பிரமிக்கச்செய்த சோவியத் நாடு.

புரட்சியிலே கண்ட புத்துலகத்தை உருவாக்க வேண்டி லெனின் பல அருமையான திட்டங்களைத் தீட்டினான். தீட்டிய திட்டங்களிலே முக்கியமானது கல்வித் திட்டம். ஆணும் பெண்ணும், இளையோரும் முதியோரும் ஆகிய அத்தனை பேரும் கல்வி கற்கவேணடும் என்ற கட்டாயக் கல்விமுறையை, லெனின் அமுலுக்குக் கொண்டுவந்தான்.

லெனின் கொண்டுவந்த திட்டம், எந்த அளவிலே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு, இன்று மாஸ்கோ நகரிலே இருக்கும் "லெனின் நூல் நிலையம்" ஒன்றே போதிய சான்றாகும்.

மாஸ்கோ நகரிலே உள்ள 1500க்கு மேற்பட்ட நூல் நிலையங்களிலே, மிகப்பெரியது 'லெனின் நூல் நிலையமாகும். இதுவே உலகத்தின் இரண்டாவது மிகப்பெரிய நூல் நிலையமும் ஆகும். இந் நிலையத்திலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 1,00,00,000 (ஒருகோடி). இந்நிலையத்திற்கு உலகத்தின் பல பாகங்களிலிருந்து, நாள்தோறும் சுமார் 10,000 புத்தகங்கள் வந்து சேருகின்றன. வரும் புத்தகங்களை இலாகா வாரியாகப் பிரித்து அடுக்கி வைப்பர். நிலையத்திற்கு வருபவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களை எளிதில் கண்டெடுத்துப் படிப்பதற்காக சுமார் 2,500 அட்டவணைத் தாள்கள் (Index Cards) ஒவ்வொரு இலாகாவிலும் உண்டு.

நகரவாசிகள் மட்டுமின்றி, கிராம வாசிகளும் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைப் படிப்பதற்கு பல வசதிகளை சோவியத் சர்க்கார் செய்துள்ளது. கிராமங்களிலுள்ள சிறிய நூல் நிலையங்கள் மூலமாகவோ, அல்லது வேறு எந்த ஸ்தாபனம் (Association) மூலமாகவோ, லெனின் நூல் நிலையத்திலிருக்கும் புத்தகங்களை வரவழைத்துப் படிக்கலாம். எனவே, சோவியத் நாட்டிலே கல்வி நீரோடை பாயாத இடமே இல்லையெனலாம்.

சோவியத் நாட்டிலேயிருக்கும் பல்லாயிரக்கணக்கான நூல் நிலையங்களிலே உள்ள புத்தகங்கள் அவ்வளவும்

நாட்டு மக்களனைவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய தும், வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதும் ஆகும். அந் நூல்கள் இகத்தைப் பற்றிப் பேசுபவையே யொழிய, பரத் தைப்பற்றி பேசுபவையல்ல, இவ்வுலகம் பொய், அவ்வுல கம் மெய் என்ற வேதாந்த விளக்கம் உரைக்கும் நூல் ஒன் றைக்கூட நாம் அங்கு காண முடியாது. ஆண்டவனையும், அரசனையும் புகழ்ந்து பாடும் நூல்கள் அங்கு கிடையாது. ஆனால் அறிவு விளக்கத்திற்கு வேண்டிய அத்தனை புத்தகங் களும் அங்கே உண்டு. இத்தகைய அற்புத முறையிலே அமைந்திருக்கிறது மாஸ்கோ நகரிலே இன்றுள்ள லெனின் நூல் நிலையம்.

நூல் நிலையங்கள் மட்டுமா? ஒரு காலத்திலே, சோவி யத்நாட்டிலே மடங்களாகவும், மாதாகோவில்களாகவும் இருந்த அத்தனையும் இன்று தொழிற்சாலைகளாகவும், பொருட்காட்சிச் சாலைகளாகவும் மாறிவிட்டன. மன்னர் களும் மடாதிபதிகளும் வாழ்ந்த இடங்களிலே மக்கள் வாழ்கின்றனர். இன்று உலகமே கண்டு வியக்கத்தக்க அளவிலே தங்கள் வாழ்வை வளம்படுத்திக்கொண்டனர் சோவியத் நாட்டு மக்கள்.

ஆனால் நம் நாட்டில்...? இங்கும் ஒரு சார் பரம்பரை உலவிவருகிறது. ஒரு லெனினும் வாழ்கிறார், ஆனால் 1917 தான் இன்னும் வரவில்லை!

சம்மட்டியார்

(டம் டம்)

'மாலட்' என்றால் இரஷ்ய மொழியில் சம்மட்டி என்று பொருள்படும். மாலட்டாவ் என்பவரின் இயற்பெயர் வியாச்சிஸ்லாவ் மிக்காய் லவிச் என்பது. புனை பெயர்தான் நமக்குத் தெரிந்த மாலட்டாவ் என்பது.

உலக அரசியல் அரங்கிலே இன்று மாலட்டாவ் மிக முக்கியமான பாத்திரம். இரஷ்யாவின் பிரதிநிதியாக பல பெரிய மாநாடுகளில் கலந்துகொண்டு, ஆங்கில, அமெரிக்க, பிரஞ்சு பிரதிநிதிகளுடன் விவாதம் நடத்தி வருகிறார். அவருடைய வரலாற்றைக் கவனிப்போம்.

டார்ட்டாரியக் குடியரசுப் பகுதியிலே 1890 வது ஆண்டில் பிறந்தார். அவருடைய தாய் தந்தையர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். மாலட்டாவ் உயர்தரப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதுதான் 1905ம் ஆண்டுப் புரட்சி நடைபெற்றது. இரஷ்யாவை பெரிய குலுக்கு குலுக்கிவிட்டது. மாலட்டாவுக்கு ஆர்வம் பொங்கியெழுந்தது. மார்க்ஸ், என்ஜல்ஸ், போன்றோரின் தத்துவங்களை கரைத்துக் குடித்தார். 1906-ம் ஆண்டில் அரசியலில் நுழைந்தார். அப்போதுதான் சம்மட்டியார் என்ற புனைப் பெயரை வைத்துக் கொண்டார்.

1906 ஆம் ஆண்டிலிருந்து 1917-ஆம் ஆண்டுவரை மாலாட்டாவ் பலவித இயக்கத் தொண்டுகளை செய்தார். லெனின் கிராட் நகரத்திற்கு அந்தக்காலத்தில் செயிண்ட் பீட்டர்ஸ் பர்க் என்று பெயர். அங்கே மாலட்டாவ் துண்டு

பிரசுரங்களை வெளியிட்டார். இருமுறை தண்டிக்கப் பட்டு சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார்.

சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார். 'பிராவ்டா' என்ற சிறந்த பத்திரிகையின் ஆசிரியராக வேலைபார்த்ததுடன் லெனினிக்கு அவ்வப்போது செய்திகளைச் சேகரித்து தரும் வேலையில் ஈடுபட்டிருந்தார். இந்தச் செய்தித் தொகுப்புகள் லெனினுக்கு மிகுந்த திருப்தியை அளித்தன. 'இரஷ்யாவின் சிறந்த தொகுப்பாளர்' என்ற புகழுரையை லெனின் மாலட்டாவுக்கு அளித்தார்!

புரட்சி இயக்கம் ஏற்கனவே இரு பிரிவுகளாகிவிட்டது. லெனின் தலைமையிலிருந்த போல்ஷவிக் பிரிவும், மேன்ஷவிக் பிரிவும் வெவ்வேறு வழியை பின்பற்றின. முன்னையது தீவிரவாதிகளைக் கொண்டது. மாலட்டாவ் லெனினைப் பின்பற்றுனர். 1917-ல் லெனின் வெற்றியடைந்த போது மாலட்டாவ் போல்ஷவிக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அங்கத்தினரா யிருந்தார். பிராவ்டா பத்திரிகை மாலட்டாவையும் ஸ்டாலினையும் அறிமுகப்படுத்தியது. ட்ராட்ஸ்கிக்கும் லெனினுக்கும் பிளவு ஏற்பட்டது. மாலட்டாவ் லேனினையே பின்பற்றினர்.

சோவியத் நாடு முன்னேறியதன் முக்கியக் காரணம் 5ஆண்டு திட்டங்கள். மாலட்டாவ் இவைகளில் மிகவும் பங்கெடுத்துக்கொண்டார். போர் காலத்தில் டாங்கிகளின் உற்பத்தி இலாகா இவரிடம் இருந்தது. இன்று வெளிநாட்டு இலாகாவின் தலைவராக விளங்குகிறார்.

மாலட்டாவ் எப்போதும், தான் பேசுவதுதான் சரியென்ற உறுதியுடன் காணப்படுகிறார். கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்காதவர். விடாப்பிடியாக தான் சொன்ன

கருத்துக்களையே திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறவர். வளைவு, நெளிவு, குழைவு, போன்ற தன்மைகள் இவரிடம் அறவே கிடையாது. அவரைச் சரிப்படுத்த பல முயற்சிகள் நடந்தன. நகைச்சுவை, மது, தர்க்கம், முரட்டுத்தனம், இவை எவையும் மாலட்டாவை அசைக்கவில்லை. பல பிரிட்டன், பிரான்சு, அமெரிக்க அரசியல் வாதிகள் அவரை மனமார வெறுக்கின்றனர். ஆத்திரமடைந்த ஒருவர் கூறினர், "மாலட்டாவின் முகம் உதைபந்தை ஒத்திருக்கின்றது. நான் அதை உதைக்க ஆசைப்படுகிறேன்." மாலட்டாவ் இவைகளைப்பற்றி கவலைப்படவில்லை. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி அவர் கவலைபட்டதேயில்லையாம்.

மாலட்டாவைப்பற்றிய கதை ஒன்று உலவுகிறது. ஸ்டாலின் வீட்டில் அமெரிக்கப் பிரதிநிதிக்கு விருந்து ஒன்று நடந்தது. விருந்து முடிந்ததும் மாலட்டாவ் கீழ்க் கண்டவாறு பேசினாராம். "மிக அருமையாக நேரத்தைக் கழித்தோம். எல்லோரும் அவரவர் மனதிலுள்ளதை சொல்லிவிட்டார்கள். (நகைச்சுவை தோன்ற முயற்சி செய்து) இப்போது யாராவது அமெரிக்க நண்பர் அணுகுண்டைப் பற்றி பேசலாம் என்பது எனது யோசனை!" விருந்தாளிகள் மேலுக்கு பலவீனமாகச் சிரித்தனர். ஸ்டாலின் எழுந்தார். மாலட்டாவை முறைத்தார். பயங்கரமான குரலில், "அணுகுண்டு ஓர் பெரிய விஞ்ஞான சாதனம். நான் நினைக்கிறேன், இது நகைச் சுவைக்குறிய பொருளல்ல" என்று கர்ஜித்தாராம்.

பாட்ஸராவ் என்பவர்தான் மாலட்டாவுடன் நெருங்கிப் பழகும் அதிகாரி. ஆனல் அவர் கூட பத்திரமாகப் பழகுவாராம்.

மாலட்டாவின் இல்வாழ்க்கை நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது. 1920ம் ஆண்டில் மாலட்டாவ் உக்ரே னியாவைச் சேர்ந்த ஓர் யூதப் பெண்ணை மணந்தார். பாலினு கார்பவ்ஸ்க்யாயா என்ற அந்த அம்மையாரும் பொதுவுடமை கட்சிக்கு சிறந்த தோண்டாற்றி வருகிறார். முதல் முதலில் சோப் தொழிற்சாலையில் வேலை செய்தார். 1936ல் அமெரிக்காவுக்குச் சென்றார். 1939ல் மீன் இலாகா தலைவியனார். 1941ல் திடீரென மறைந்தார். நாடு கடத்தப்பட்டாரென்றும், சுட்டுக்கொல்லப்பட்டாரெ ன்றும் வதந்திகள் வந்தன. ஆயினும் 1943ல் தற்காப்பு வேலைகளில் காட்டிய திறமைக்காக அரசாங்கத்தாரால் புகழப்பட்டார். இன்னும் மாலட்டாவுடன் பெரிய நிகழ்ச் சிகளில் காட்சியளிக்கிறார். ஸ்வெட்லானு என்ற தங்கள் பெண் குழந்தையை மாலட்டாவ் தம்பதிகள் பிரியத்துடன் வளர்க்கின்றனர். இந்தக் குழந்தையை பற்றி மாஸ்கோ வட்டாரங்கள்ளில் ஓர் கதை உலவுகிறது. ஓர் நாள் குழ ந்தை தகப்பனுரை வீட்டிலேயே இருந்து விளையாடும்படி கேட்டதாம். அதற்கு மாலட்டாவ் தனக்கு வேலையிருப் பதாகவும் வீட்டிலிருக்க முடியாதென்னும் தெரிவித்தாராம். குதந்தை ஸ்வெட்லானு அழுதுகொண்டே, "போ அப்பா! தாங்கள் வேலை செய்வதில்லை. அம்மாதான் வேலை செய்கிறுள். தாங்கள் ஸ்டாலினுடன் உலவிக்கொண் டிருக்கிறீர்கள்" என்று சொன்னதாம்.

மாலட்டாவ் இன்று உலகத்தின் கவனத்தைக் கவர்ந் திருக்கிறார்.

சாமியும், சமயமும்.

(பெரியார்)

தேவர்கள் என்றும் தெய்வங்கள் என்றும் அவதார மென்றும் ரூபமென்றும் அதற்காக மதமென்றும் சமயமென்றும் அதற்காக மதாச்சாரியர்கள் என்றும் அதற்கு சமயாச்சாரியர்கள் என்றும் கட்டியழுபவர்கள் ஒன்று வயிற்றுப் பிழைப்பு புரட்டர்களாயிருக்க வேண்டும், அல்லது பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும் என்பதே நமது அபிப்பிராயம் என்பதாக பல தடவைகளில் வெளிப் படுத்தி இருக்கின்றோம்.

அது போலவே சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ சொல்லப்படுபவையும் ஒரு "சாமி" என்றோ, அல்லது ஒரு ஆசாமி என்றோ, அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் ஞானமற்றவர்களின் கொள்கையென்றே சொல்லுவோம்.

உலகத்தோற்றமும், அதில் நடை பெறும் உற்பத்தி, வாழ்வு, அழிவு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும், ஷை "சாமி"களோ ஆசாமிகளோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ, அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொருப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் விசார ஞானமற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

மற்றப்படி மேல்கண்ட ஒவ்வொரு தன்மைக்கு மேல் கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது என்றும்; அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும் அத்தன்மைக்கு ஆதாரமான தோற்றங்களைத் தான் கடவுள் என்றோ, தெய்வம் என்றோ, சாமி என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம் என்பதாகவும், தானாகத் தோன்றிற்று, தானாக வாழ்ந்தது, தானாக அழிகின்றது என்கின்ற யாவும் இயற்கை தான் என்றும், அவ்வியற்கைக்குத்தான் கடவுள், ஆண்டவன், சாமி, தெய்வம் என்று சொல்லுகின்றோம் என்பதாகவும் மற்றும் இவ்வியற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்க வேண்டுமே என்றும் அந்தக்காரணத்திற்கோ சக்திக்கோ தான் கடவுள், சாமி, ஆண்டவன், தெய்வம், என்கிற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக் கொண்டு மாத்திரம் இருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது அவ்வளவாக தகராறு இல்லை என்று சொல்லிக் கொள்ளுகின்றோம்.

ஆனால் அந்தக் கடவுளுக்கு கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண் பெண் தன்மை, பெண்ஜாதி புருஷன், குழந்தை குட்டி, தாய் தகப்பன் முதலியவைகளை கற்பித்து, அதனிடத்தில் பக்தி செய்ய வேண்டும் என்றும் அதற்கு கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து தினம் பல வேளை பூஜை செய்யவேண்டும் என்றும் அச்சாமிகளுக்கு கல்யாணம் முதலியவைகள் செய்வதோடு அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான "திருவிளையாடல்கள்" முதலியவைகள் செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டும் என்றும்'

அக்கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல் களைப்பற்றியும் பாடவேண்டும் என்றும், அப்பாடல்களை 'வேதமாக' 'திருமுறையாக' 'பிரபந்தமாக' கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரமாக கொள்ளவேண்டும் என்றும், அப் பாடல்களை பாடினவர்களை 'சமயாச்சாரியர்'களாக பல அற் புதங்கள் செய்தவர்களாகக் கொள்ள வேண்டும் என்றும், இது போன்ற இன்னும் பல செய்தால் அக்கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த—செய்கின்ற— செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும் அயோக்கியத்தனங்களையும் கொடுமை களையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகளான மூட நம்பிக்கையும் வயிற்றுப்பிழைப்பு சுயநலப் பிரசாரமும் ஒழிய வேண்டுமென்பதுதான் நமது கவலை. ஏனெனில் இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைப்படுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள் போல நம் நாட்டு மக்களுக்கு பகுத்தறிவு விசாலப்பட்டு மற்ற நாட்டார்களைப் போல விஞ்ஞான (சையன்ஸ்) சாஸ்த்திரத் திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அந்நிய ஆட் சிக் கொடுமையிலிருந்து தப்பமுடியாமல் வைத்த பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்து கொடுத்துக்கொண்டிருப்பதற்கும் இம்மூட நம்பிக்கையும் சில சுயநலமிகளின் வயற்றுச்சோற் றுப் பிரசாரமும் இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி பழக்கங் களும் செலவுகளுமேதான் காரணங்கள் என்பதாக நாம் முடிவு செய்து கொண்டிருக்கின்றோம். நாமும் நமது நாடும் அடிமைப் பட்டுக்கிடப்பதற்கும், ஒருவரையொருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொடுமைப் படுத்தி ஒற்றுமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள்பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்

படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப் பட்டுக் கிடப்பதற்கும், சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் மேல்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன் சமயமும் சமயாச்சாரி யர்கள் என்பவர்களும் அவர்களது பாடல்களும் நெறிக ளுமே முக்கிய காரணம் என்பதைத் தூக்கு மேடையி லிருந்தும் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

நிற்க. இக்கடவுள்களின் பொருட்டாக நம்நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கல்யாணம் முதலிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலக்ஷேபத் திற்கும், இக்கடவுள்களைப்பற்றிய சமயங்களுக்காக மடங் களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த் தஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக்கடவுள்களின் அவதார மகிமைகளையும் திருவிளையாடல்களையும் இக் கடவுள்களைப் பற்றிப்பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும் புஸ்தகங்களையும் வாங்குவதற்கும், மற்றும் இவை களுக்காகச் செலவாகும் பொருள்களிலும் நேரங்களிலும் நம் ஒரு நாட்டில் மாத்திரம் சுமார் இருபது கோடி ரூபாய் களுக்குக் குறைவில்லாமல் வருஷா வருஷம் பாழாகிக் கொண்டு வருகின்றன என்று சொல்வது மிகையாது.

இவ்விருபது கோடி ரூபாய்கள் இம்மாதிரியாக பாழுக் கிறைக்காமல், மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான (சையன்ஸ்) வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச் சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால் நம்நாட்டில் மாத்தி ரம் வாரம் லக்ஷக்கணக்கான மக்களை நாட்டை விட்டு அந்நிய நாட்டிற்கு கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா

அன்றியும் தொழிலாளர்கள் கஷ்டங்கள் என்பது ஏற்படுமா? தீண்டக்கூடாத — நெருங்கக்கூடாத — பார்க்கக்கூடாத— மக்கள் என்போர்கள் கோடிக்கணக்காய் பூச்சி, புழு, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்து கொண்டிருக்க முடியுமா? 100க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசிமக்கள், தாசிமக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக் கொண்டு அட்டை இரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சிக்கொண்டும், நம்மையும் நம் நாட்டையும் அந்நியனுக்குக் காட்டிக்கொடுத்து நிரந்திர அடிமைகளாக இருக்கும்படி செய்துகொண்டும் இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம். நமக்கு கல்வி இல்லாததற்கு சர்க்கார்மீது குற்றம் சொலுத்துவதில் கவலை கொள்கிறோமேயல்லாமல் நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டிருப்பதைப் பற்றி யாராவது கவலை கொள்கின்றோமோ என்று கேட்கின்றோம்.

நிற்க, "அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ, உபசாரத்தையோ மாறு பெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன், அதனால் உனக்கு என்ன தடை?" என்று யாராவது சொல்ல வருவார்களானால், அதையும் (அதாவது அக்குணங்கள் என்று சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும்படியான குணங்களாகவோ "கடவுள்" களாகவோ தான் இருக்கவேண்டும் என்று, சொல்லுகின்றோமே ஒழிய வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

மதம்.

இது போலவேதான் "மதம் என்பதும் சமயம் என்பதும் சமய நெறி என்பதும் மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன்

நடந்து கொள்ள வேண்டிய நடையைப் பற்றிய கொள்கை களைக் கொண்டது'' என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வ ளவாக தகராறு இல்லை. "அன்பேசிவம் சிவமே அன்பு'' என்பதான சிவனிடத்தில் நமக்கு சண்டையில்லை "அன்பு என்னும் குணம்தான் சிவம்; அந்த அன்பைக் கைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவது தான் சைவம்'' என்பதானால் நாமும் ஒரு சைவனாகவும் அதன் மூலம் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக்கொள்ளவும் ஆசைப் படுகின்றோம். அது போலவே "ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங் கள்தான் விஷ்ணு; அக்குணங்களைக் கைக்கொண்டு ஒழுகு வதுதான் வைணவம்'' என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகராறில்லை என்று சொல்லுவதோடு நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக்கொள்ளும் நிலைமை ஏற்படவேண்டும் என்றே ஆசைப் படுகிறோம். நமக்கும் மற்றும் உள்ள மக் களுக்கும் அச்"சைவத் தன்மை'' யும் ஏற்பட வேண்டும் என்றும் தவங் கிடக்கின்றோம்.

அப்படிக்கில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டதுதான் கடவுள் என்றும், அதை வணங்குகிறவன் தான் சைவனென்றும் அப்படி வணங்கு கிறவன் இன்ன மாதிரியான உடை பூஷணை கொண்டவ னாகவும் இன்னமாதிரி குறி இடுகிறவனாகவும் இருப்பது தான் சைவம் என்றும், இன்ன பேருள்ள கடவுள்களைப் பற்றிப் பாடின, எழுதின ஆசாமிகளையும் புஸ்தகத்தையும் வணங்குவதையும் மரியாதை செய்வதும்தான் சைவம் என்றும், மற்றபடி வேறு இன்ன உருவமோ; பேரோ உள்ள "கடவுள்'' என்பதை வணங்குகிறவர்களையும் வேறு

குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று சொல்வதுமான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகராறு இருக்கின்றது என்று சொல்வதுடன் அக்கொள்கைகளையும் அச்சமயங்களையும் அக் கடவுள்களையும் சுட்டுப் பொசுக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும் பல சமயப் புரட்டர்கள் இம்மாதிரி விவகாரம் வரும்போது "நான் கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ ஒருகுணமோ இருப்பதாகச் சொல்லவில்லை" என்றும், "மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரம் தான்கடவுள், மரம்கொடிதான் கடவுள், புஷ்பந் தான் கடவுள், அதன் இன்பம் தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றம்தான் கடவுள்" என்பதாக தமக்கே புரியாமல் உளறுவதும், மறுபடியும் "சிவன் தான் முழுமுதற் கடவுள்; மற்றபடி விஷ்ணுவும் பிரம்மாவும் அவரது பரிவார தேவதைகள், சைவசமயம் தான் உண்மைச் சமயம், அது தான் முக்தி அளிக்க வல்லது" என்பது, அல்லது "விஷ்ணுதான் முழுமுதற் கடவுள், அது தான் பரத்துவம் கொண்டது, மற்றவைகள் விஷ்ணுவின் பரிவார தேவதைகள்" என்பது, "அச்சிவனையோ விஷணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக்கடவுளையும் அச்சமயங்களையும் பாடினவர்கள் தான் கடவுள் நெறியும் நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள்— சமயாச்சாரியர்கள்" என்பதுமாக மக்கள் முன் உளறிக்கொட்டி அவர்களது மனதை குழப்பச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களை குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று தான் சொல்லுகின்றோம்.

உலகத்தில்-கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விவரப்படுத்திக் கொள்ளமலே கடவுளைப்பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றன. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூட சொல்லுவோம்.

எனவே, பாரம்பரியமானதும் எங்கும் பரவியிருக்கும்படியான மடமைக்கு இதை விட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் இந்த விவகாரம் பாமர மக்களிடையில் மாத்திரம் நடை பெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை. இது பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையே தான் பெரிதும் (இவ்வறியாமை) இடம்பெற்று உரம் பெற்றிருக்கின்றது.

கடவுள் அவசியமா?

நிற்க, சர்வவல்லமையுள்ளது என்று சொல்லப்படுவதான ஒரு "கடவுள்" இருக்கின்றார் என்பதை (அது இன்னது என்று புரியாவிட்டாலும்) விவகாரமில்லாமல் ஒப்புக் கொள்ளுவதாகவே வைத்துக்கொண்டாலும் மனிதனின் வாழ்க்கைக்கு அக்கடவுளின் சம்மந்தமோ, வழிபாடோ அவசியமா? அல்லது மனிதனுக்கு சில குணங்களைக் கைக்கொண்டு அதன்படி ஒழுகும் தன்மை அவசியமா என்பதே நமது கேள்வி. அன்றியும் அப்படிப்பட்ட ஒரு "கடவுள்" தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்றுவது தனக்கு கோவில்கட்ட வேண்டுமென்றுவது, பூஜை, அபிஷேகம், தேர், திருவிழா, உற்சவம் முதலியவைகள் செய்ய வேண்டும்

என்றுவது ஆசைப்படுமா? அல்லது மக்கள் சில குணங்களைக் கைக்கொண்டு மற்ற ஜீவன்களிடத்தில் இன்ன இன்ன விதமாய் நடந்துக்கொள்ளவேண்டும் என்பதை விரும்புமா? என்பதை யோசித்துப் பார்த்தால் "கடவுள்" என்பது வாழ்க்கைக்கு வேண்டுமா வேண்டாமா என்பது விளங்காமல் போகாது. அன்றியும் அச்சர்வ வல்லமையுள்ள சாமிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த இவ்வளவு ஆசாமிகளும் சமயங்களும் வேண்டுமா? என்றும் அந்தச் சாமிகளை இல்லை என்பவர்களுக்கு ருஜுபடுத்த இவ்வளவு வக்கீல்கள் வேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

இது போலவே ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாக உலகத்திற்கும் மக்களுக்கும் கடவுளுக்கும் சம்பந்தம் கற்பிக்கப்பட்டிருந்தாலும் புத்த மதம் என்பதில் மனிதன் நடந்துக்கொள்ளவேண்டிய ஒழுங்கைத் தவிர வணக்கம் என்பதை அம்மதத் தலைவர் ஒரு சிறிதும் வலியுறுத்தியிருப்பதாகக் காணப்படவில்லை.

அன்றியும் அவர் கடவுளைப்பற்றியோ, கடவுளை வணங்குவதைப் பற்றியோ, கடவுள் நெறி உணர்த்திய பெரியார்களை மரியாதை செய்வதைப்பற்றியோ கவலை கொண்டு ஒரு கடுகளவு நேரமாவது செலவழித்திருப்பதாகவும் காணக் கிடைக்கவில்லை. அன்றியும் அதைப்பற்றிய வார்த்தைகளையாவது அவர் எங்காவது உபயோகித்திருப்பதாகச் சொல்லுபவர்களும் காணக்கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை மதத் தலைவராகவும், அக்கொள்கையை, அம்மதத்தை, அச்சமயத்தை இன்றைய தினம் உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் அதாவது 50 கோடி மக்களுக்குமேல் தம் மதமாகவும் ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும் அப்படிப்பட்ட புத்தரை தங்கள் கடவுள் அவதாரமென்றும், தீர்க்க தரிசி யென்றும், பகவான் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்ற ஜனங்கள் இந்துமதம் என்பதிலே, சைவமதம் என்பதிலே, வைணவமதம் என்பதிலே பல கோடிக்கணக்கானவர்கள் இருப்பதோடு அதற்கு பல ஆதாரங்களும் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை யாராவது மறுக்க முன்வருகின்றார்களா?

"மனிதனுக்கு ஏதாவதொரு மதமோ சமயமோ வேண்டியது அவசியம்'' என்று யாராவது சொல்ல வருவார்களானால் புத்தமதம் என்பதும் உலகாயுத மதம் என்பதும் சூன்ய மதம் என்பதும் இயற்கை மதம் என்பதும் மதங்கள் என்று தானே சொல்லப்படுகின்றன? அப்படி இருக்கையில் அம் மதங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டவர்கள் பலர் இருக்கலாம். எனவே அது எப்படி குற்றமுடையதாகும்? எப்படி பல மதங்களுக்கும் சமயங்களுக்கும் தலைவரும் காலமும் இல்லாமல் இருக்கின்றதோ, அதுபோலவே இம் மதங்களில் சிலவற்றிற்கும் காலமோ தலைவரோ இல்லாமலிருக்கலாம்.

ஆகவே, ஒரு மனிதன் இன்ன மதக்காரனாகவோ இன்ன சமயக்காரனாகவோ இன்ன கடவுளை வணக்குகிறவனாகவோ இருக்கவேண்டும் என்பதாகக் கட்டளையிடவும் இன்ன மதக்காரனாக இருக்கக்கூடாது என்று கேட்கின்றோம்.

மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது அந்தந்த மனிதனின் தனி இஷ்டத்தைப் பொருத்ததா அல்லது மற்றொருவனுடைய நிர்பந்தமா என்று கேட்கின்றோம்.

"துறவி"க்கு மதம் ஏது? "ஞானிக்கு" சமயம் ஏது? கடவுள் ஏது? "வேதாந்"திக்கு மதம் ஏது? கடவுள் ஏது? சகலத்தையும் துறந்தவர்தானே "துறவி"? சகலத்தையும் சரி என்று எண்ணுகிறவர்கள் தானே "ஞானி"?

"சகலமும் மித்தை, பொய், மாய்கை" என்று எண்ணுகின்றவன் தானே "வேதாந்தி" என்பவன்? இவைகளை உலகம் ஒப்புக்கொள்கின்றதா இல்லையா? அங்ஙனமாயின் இம் மூவர்களும் "நாஸ்திகர்"களா என்று கேட்கின்றோம்.

உலகத்தில் 'துறவி' ஆவதற்கோ 'ஞானி' ஆவதற்கோ 'வேதாந்தி' ஆவதற்கோ எவனுக்கு உரிமை இல்லை என்று கேட்பதோடு எந்தப் புஸ்தகத்தை படித்து விட்டு யாரிடம் உபதேசம் பெற்று அல்லது எந்த சமயத்தை ஏற்று எந்தக் கடவுளைத் தொழுது 'துறவி' யாகவோ 'வேதாந்தி' யாகவோ ஆகவேண்டும் வன்கின்ற நிர்ப்பந்தமுண்டா என்று கேட்கின்றோம்.

இவ்விஷயங்களை நாம் வலியுறுத்துவதால் பல நண்பர்களுக்கு சற்று மனக்கசப்பு ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் நம் நாட்டின் விடுதலை கண்டிப்பாக இந்த விஷயங்கள் விளக்கமாவதில் தான் இருக்கின்றதே யொழிய வெள்ளைக்காரரிடமும் பார்ப்பனர்களிடமும் நேரில் முட்டிக்கொள்வதால் ஒரு பயனும் இல்லை என்றே சொல்லுவோம்.

வெள்ளைக்கார அரசாங்க முறையும் பார்ப்பனர்களின் ஆதிக்கமும் நமது மானத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் தரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றது என்பது சத்தியமானாலும் அவ்வக்கிரமமும் ஆட்சியும் ஆதிக்கமும் இந்து

மதம், கடவுள், சமயம் என்பவைகளான மூடக்கொள்கைகளின் பேரில் தான் கட்டப்பட்டிருக்கின்றது என்பது நமது முடிவு. இம்மூடக்கொள்கைகளை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரர்களையும் பார்ப்பனர்களையும் பூண்டோடு அழிக்க நம்மால் முடிந்து விட்டாலும் மறுபடியும் வெள்ளைக்காரர்களும், பார்ப்பனர்களும், வேறு எங்காவதிருந்தோ அல்லது நமக்காகவே உற்பத்தியாகியோ நம்மை அடிமைகளாக்கி ஆதிக்கம் செலுத்திக்கொண்டு தான் வருவார்கள் என்பதை ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு அந்நிய அரசாங்கமோ இல்லாமல் நம் நாட்டார்கள் என்போர்கள் அரசாண்டு வந்த காலத்திலேயே நாம் அடிமைகளாக, தற்குறிகளாக, தாசி மக்களாக தீண்டாதவர்களாக இருந்து வந்திருக்கின்றோம் என்பதை தயவு செய்து நம்புங்கள் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

நம்புவதற்கு ஏதாவது கஷ்டமாயிருந்தால் நம் நாட்டு மக்களால் 'சாமுண்டீஸ்வரி' பேராலும் 'பத்மநாபசாமி பேராலும் 'கிருஷ்ணசாமி' பேராலும் ஆளப்படும் மைசூரையும் திருவாங்கூரையும் கொச்சியையும் தயவு செய்து சற்று திரும்பிப்பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆட்சி முறைக் கொடுமையும், பார்ப்பன ஆதிக்கமும், வெள்ளைக்கார அந்நிய அரசாங்கத்தை விட உள்நாட்டு மக்களால் ஆளப்படும் சுயராஜ்ய அரசாங்கத்தில் அதிகமா? கொஞ்சமா? என்பதைக் கவனித்தால் வெள்ளைக்காரரும்

பார்ப்பனர்களும் தாங்களாகவே தங்கள் பலத்தால் அக்கிரமங்களை செய்கின்றார்களா? அல்லது இந்து மதமும் கடவுளும் மதநெறியும் இவ்வித அக்கிரமங்கள் செய்ய இடம் கொடுக்கின்றனவா என்பது சுலபத்தில் விளங்காமல் போகாது என்றே எண்ணுகின்றோம்.

எனவே நம் நாட்டிற்கு இப்போது அவசியமாய் வேண்டியது என்னவென்றால், மூட நம்பிக்கை ஒழிய வேண்டும்; அறிவுக்கு சுதந்திரமும் விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சி பெற வேண்டும்; சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும். இம் மூன்றும் ஏற்பட வேண்டுமானால் மதமும், சாமியும், சமயாச்சாரியர்களும் சந்திக்கு வந்தே தீரவேண்டுமே யல்லாமல் இதற்கு வேறு பரிகாரமோ ராஜியோ இல்லையென்றே சொல்லி இதை முடிக்கின்றோம்.

நேர்த்தியான வேலைப்பாடு!

குறித்தகாலத்தில் முடித்துத்தருகிறோம்!

விக்டரி டெயிலரிங் அவுஸ்,

ஸெண்ட் ஜேவியர் தெரு,

ஜி. டி. மதராஸ்.

பெரியாரும் லெனினும்

(A. P. J.)

'அவன் ஒரு கள்ளன்' 'ஜர்மானியரின் ஒற்றனையா அவன், அவனை நம்பாதே!'

லெனினைக்குறித்து அவரது வாழ்நாளில் இப்படிப் பட்ட பேச்சைத்தான் கேட்கமுடிந்தது பல இடங்களிலே. ஆனால், இன்று அதே லெனின், ஆர்க்டிக் முதல் அண்டார்க்டிக்வரை போற்றப் படுகிறார். பாட்டாளிகளுக்கு முன்னேற்றப் பாதையை வகுத்துத்தந்த வீரரென மதிக்கப்படுகிறார். முதலாளித்தத்துவத்தை, ஜாரின் ஆணவத்தை ஆழக் குழி தோண்டிப் புதைத்த புனிதரெனப் புகழப்படுகிறார்.

பெரியார் இராமசாமி யவர்களைக் குறித்து பலர் தவறாக எண்ணியும் பேசியும் வருவதை நாம் பார்க்கிறோம். தேசத் துரோகி, நாஸ்திகர் என்ற இரண்டு பட்டங்களும் தாராளமாக கிடைக்கின்றன. அறியாமையும் பேதமையும் லெனினைக் கள்ளனென்றும், ஜர்மானிய ஒற்றனென்றும் பழித்தன. அவைதான் பெரியாரையும் பழிக்கின்றன. அவர்களது உயர்ந்த குறிக்கோள், நோக்கம், உழைப்பு ஆகியவை அதிகமாயிற்றே ஒழிய, இந்தப் பழிச் சொற்களால் அவை குறைந்துவிடவில்லை.

வெறுக்கத்தெரிந்தவனே வெற்றி பெறுவான் என பெரியார் அடிக்கடிச் சொல்வதுண்டு. அக்கிரமத்தை, ஆணவத்தைச், சூழ்ச்சியை, வெறுக்கத்தெரிந்தவர் பெரியார்.

லெனின் ஜாரின் ஆணவத்தை, ரஸ்புட்டீன் சூழ்ச்சியை வெறுத்தார். சைபீரியாவில் சிலகாலம், சுவித சர்லாந்தில் சிலகாலம், அப்படியே அவருடைய வாழ்க்கையின் பெரும் பகுதிகழிக்கவேண்டியதாயிற்று. தான்வெறுத்தது மட்டு மல்லாமல், மக்களும், அக்கிரமத்தை வெறுக்குமாறு செய் தார்.

மதம் ஒழிந்தாலொழிய மக்கள் முன்னேற முடியாது என்ற கருத்துக் கொண்டவர் பெரியார். இந்து மதம் திரா விடருடையதல்ல வென்பதும் ஆரியன் சதியென்பதும், சாமிகளெல்லாம் ஆரியரின் படைப்புகளென்பதும் அவரது முடிந்த முடிவு. பாதிரிகளுக்கு லெனின் பரிவு காட்ட வில்லை. புரட்சியை அடக்க, புல்லர்களைக் காப்பாற்ற இரஸ் புடீன் செய்த தந்திரம் லெனினுக்கு ஆத்திரமூட்டியது.

இயந்திரத்தைப் பயன் படுத்திப் பாருலகை பாட்டாளி களின் இன்ப புரியாக்க வேண்டுமென்பது லெனின் ஆசை. இரஷ்யாவில் இயந்திரங்கள் பெருக்கத்துக்குப் பாடு பட் டார். இயந்திரங்களின் சக்கரங்களின் சுழற்சியிலே சுகத் தைக் காண விரும்பினர். இராட்டையின் சுழற்சியிலே சுகத்தைக்காணும் காந்தியாரைப் போலல்ல! கைராட்டை யும் உலக்கையும் காட்டு மிராண்டி காலத்துச் சின்னங்கள் என்பது பெரியாரின் கொள்கை. லெனினைவிட கடுமையான வேலை பெரியாருக்கு. காரணம், கைராட்டையே பீரங்கி யாகக் கொண்ட உலக்கைதாசர்கள் மிகுந்த நாட்டில் வேலை செய்கிறார். விஞ்ஞானத்தின் வீழ்ச்சியில் விடுதலைகாணும் வீணர்களிடை வாழ்ந்துவருகிறார். இயந்திரத்தை பூத மென்று நம்பும் காந்தியர்களிடை வேலை செய்கிறார்.

கலே, பாட்டாளிகளுக்கு பயன்பட வேண்டுமென்பதும், புரட்சிக்கருத்துக்களை பரப்பும் கருவியாக அமையவேண்டுமென்பதும் லெனினது உள்ளக் கிடக்கை. இந்தக் காரணத்துக்காகவே புஷ்கினைப் புகழ்ந்தார். கடவுளையும் கோவிலையும் அடியார்களையும் எத்தும் கலே, இனத்தை கொலை செய்யும் கருவியென்பது பெரியாரின் கருத்து. இனத்தை இழிவு படுத்தும் கம்ப இராமாயணம், பெரிய புராணம் போன்ற ஏடுகளைத் தீயிடவேண்டுமென விரும்புகிறார். இத்தகைய நூல்களை ஏற்கனவே இரஷ்யாவில் கொளுத்தினர்.

கொச்சைத் தமிழும் பாமரமக்களது வழக்காறுகளும், ஆடம்பரமற்ற முறையும், பெரியாரின் அம்சங்கள். இதே போல் லெனினும் தயவு தாட்சண்ணிய மில்லாத முடிவுகளையும், பாமரர்களது பேச்சு முறையையும் கொண்டிருந்தார்.

டால்ஸ்டாய் காந்தியாரின் குரு. அகிம்சைக் கொள்கையை இரஷ்யாவில் பரப்பியவர். டால்ஸ்டாயின் கொள்கை நாட்டைக் குட்டிச்சுவராக்கியதோடு முதலாம் புரட்சி (1905) தோற்றதற்கு முக்கிய காரணமென்பது லெனின் கருத்து. காந்தீயத்தைக் குறித்து பெரியார் கொண்டுள்ள கருத்து அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆயிரக்கணக்கான இளைஞரை பலிபீடத்தில் சாய்த்து, பனியாக்களைப் பாராளவைத்தது காந்தியம். கதர்த்திட்டத்தின் மூலம் காட்டுமிராண்டிக்காலத்துக்கு நம்மை அழைத்துச் செல்வது காந்தீயம். நாடு பற்றி எரியும் போது "இராமநாமமே கற்கண்டு" என்று திரியும் காந்தியாரின் போக்கும், சீடர்களிடையே அகிம்சைக் கொள்கை பரவியிருக்கும் 'அழகும்' அனைவரும் அறிந்ததே. பெரியார் 'குடி அரசு' 'விடுதலை'. வாயிலாகவும் இதை எடுத்துக் காட்டியுள்ளார்.

லெனின் ஒவ்வொரு வேலையையும் மிக அக்கரையுடன் கவனித்து வந்தார். அவருடைய கண்ணுக்கு எதுவும் அனுவசியமாகப் பட்டதில்லை. உதாரணமாக, காற்றாடிகளைக் குறித்துக் கூட அவர் குறிப்புகள் தயார் செய்தார். பெரியாரும் அப்படியே. அச்சகத்தின் எல்லா அம்சங்களையும் தெரிந்தவர். சட்டைக்கு பித்தான் தைப்பது முதல் ஆரியத்திற்கு அறைகூவல் விடும் வரை எல்லா வேலையும் திறம்படச் செய்து முடிக்கிறார். இயக்கத்திலுள்ள எல்லாத் தொண்டர்களைக் குறித்தும் வியக்கத்தக்க முறையில் தெரிந்து வைத்திருக்கிறார். எத்தனையோ ஆயிரம் பேர்களைப் பற்றிய நினைவுகள்! பெரியார் 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் ஊருக்குச் சென்றால் கூட, முதல் தடவை தாம் வந்த நேரத்தில் நடந்தவற்றைப் பூரா சொல்லுவார். அவருடைய ஞாபக சக்தி அபாரமானது.

உழைப்பில் லெனின் மிக சமர்த்தர். அதிகம் உழைத்த காரணத்தாலேயே அவர் இறந்தார். பெரியார் உழைப்பின் உருவம். இந்த வயதிலும், காடு, மேடு, பட்டி, தொட்டிகளில், மிகவும் சவுகரியக் குறைவு இருந்த போதிலும், பிரசாரம் செய்து வருகிறார். உழைப்பில் பெரியார் லெனினைக் கூட தோற்கடிக்கப் போகிறார் என 'ஜோஸியம்' கூறலாம்.

லெனின் பட்ட தொல்லைகள் வீண் போகவில்லை. இன்று சோவியத்தின் சோபிதத்தை அறியாதார் அறியாதாரே. இருளும், இன்னலும், இடரும் மிகுந்திருந்த தன் நாட்டை 'உலக வல்லரசாக மாற்றிய பெருமை லெனினுக்குண்டு. முதலாளிகளின் முரட்டுத் தனத்துக்குப் பலியாகி, பச்சை ரத்தம் பரிமாறி, பராரிகளாய் மாறிய பாட்டாளிகள் லெனினுடைய பெயரைக் கேட்டவுடன் உவகை கொள்வர்!

பெரியாருக்கு இருக்கும் பிரச்னைகள் லெனின் பிரச்னைகளையும் தோற்கடிக்கக் கூடியன. 2000 ஆண்டுகளாக நடந்த ஆதிக்கத்தினின்றும் திராவிடத்தை விடுவிப்பது எளிதல்ல. 100-க்கு 95 அறியாதவர்களும், துரோகிகளும் இருக்கும் சமூகத்தை முன்னேற்றுவது எவ்வளவு கடினம்? எதிர்ப்பு கொஞ்ச நஞ்சமா? காந்தீயம் பல டால்ஸ்டாய்களின் சக்தியைக் கொண்டது. பார்ப்பனீயப் புராண பீரங்கிகளும் கட்டுக் கதை டாங்கிகளும், சாரின் பீரங்கி, டாங்கிப் படையை விட வல்லமை பொருந்தியவை. பிறப்பிலேயே முதலாளியாகிவிடுகிற வர்க்கம் உலகில் வேறு பகுதிகளில் காண முடியாத ஒன்று. இனத்தின் பெருமையை இயம்ப வேண்டிய இசை வல்லுனர்களும், பேராசிரியர்களும், தலைவர்களும் ஆரியர்களுக்கு ஆதரவு காட்டுகின்றனர். கல்லில் நாரை உரிப்பது போன்ற வேலையை, பாலை வனத்தைப் பழத் தோட்டமாக்குவது போன்ற வேலையை மேற்கொண்டுள்ளார் பெரியார். ஆயினும் அவர் வெற்றி யடைவது உறுதி.

பல ஆண்டுகளுக்கு முன்னரே, பொது வுடைமை A B C யை தமிழகத்துக்குக் கற்றுக் கொடுத்த முதல் ஆசிரியர் பெரியார். இரஷ்யாவிற்குச் சென்று, அங்கிருக்கும் வளர்ச்சியைக் கண்டு, தமிழகத்துக்குப் பாட்டாளி உலகின் செய்தியை எடுத்துச் சொன்னார். சர்க்காரின் கணைகளுக்கு இலக்கானவர்—இந்தக் காரணத்தால்.

லெனினுக்கு மார்க்ஸின் தத்துவம் என்ற ஆயுதம் கிடைத்தது. மார்க்ஸ் பாதையைப் பின் பற்றிச் சென்றார். மார்க்ஸ் திட்டம் லெனினுக்கு ஊன்று கோலாயிற்று. பெரியாருக்கு அத்தகைய உடனே கையாளக்கூடிய (Ready

Made) கருவி கிடையாது. திராவிடத்தின் நோய் இன்னதெனக் கண்டு பிடித்ததோடமையாது, உதவி வறக்குறைய இல்லாமலேயே, அந்த நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கும் சிரமமும் கூட சேர்ந்து கொண்டது. எனவே பெரியார் புராணப் புதர்களை விலக்கி, மூட நம்பிக்கை மேடு பள்ளங்களை தூர்த்து, சூழ்ச்சிப் பாறைகளை அப்புறப்படுத்தி, பாதை போடும் பணியினை மேற் கொண்டுள்ளார். லெனினுக்காவது மார்க்ஸின் ஒற்றை யடிப்பாதை வழி காட்டியது. பெரியாருக்கு அதுவும் இல்லை! இரட்டைத் தொல்லை!!

பெரியாருக்கும் லெனினுக்கும், இலட்சியத்தை அடைவதில் கையாளும் முறையில் அடிப்படையிலேயே முக்கியமான வேற்றுமை உண்டு. லெனின் பலாத்காரத்தைக் கையாண்டார். பெரியார் பிரசார முறையைக் கையாளுகிறார். இதில் வியப்பு ஒன்றும் இல்லை. இருவருடைய பகைவரும், களங்களும் வேறு வேறு. பகைவனுக் கேற்ற ஆயுதமும், களத்திற் கேற்ற போர் முறையும் அமைத்துக் கொள்வது தான் அறிவுடைமை. லெனினுடைய பகைவன் பீரங்கிப் படையை நம்பிய ஜார்ஜ் மன்னன். பெரியார் எதிர்ப்பது சூழ்ச்சியைத் தந்திரத்தை, பாமரரது அறியாமையை நம்பிய ஆரியத்தை. ஆரியத்தை எதிர்க்க அதிர்வெடி தேவையில்லை. உண்மையை எடுத்துரைத்து மக்கள் மனதை மாற்றுவது தான் சிறந்த முறை. லெனின் பலாத்காரத்தை எதிர்க்க பலாத்காரத்தைக் கையாண்டார், பார்ப்பனர் களம் புகுவதில்லை. பாமரரது உள்ளங்களில் சாதி வேற்றுமையைப் புகுத்தி அவர்களைப் பிளவு படுத்தி காரியத்தை நடத்துவர். பாமரரது உள்ளங்களில் புகுந்துள்ள நச்சுக் கருத்துக்களை அகற்ற பீரங்கி தேவையில்லை—ஆபத்தானது கூட, பகுத்தறிவு மருந்து தந்தால் போதும். பெரியார் பகுத்தறிவு மருந்து நல்ல வேலை செய்து வருகிறது.

கற்பனைச் சித்திரம்:

பக்த மீரா

கே. ஜி. இராதாமணாளன்.

"மீரா, என்னடி சுத்தக் கர்நாடகமாய் இருக்கிறாயே! இப்படியா முகத்திலே மஞ்சளை அப்பிக் கொள்வது?"

"ஏண்டி பத்மா, உன்னைப் போல கால் அங்குல கனத்திற்குப் பவுடர் பூசிக் கொள்ள வேண்டுமா?"

"என்னமோ, மீரா, உன் போக்கே எனக்குப் பிடிக்கவில்லை!"

"கல்லூரி மாணவி அல்லவா நீ, என்னைக் கண்டால் கட்டோடே உனக்குப் பிடிக்கவில்லை!........அதுதானே!"

"சேச்சே! அப்படி யொன்றுமில்லை மீரா. இளம் பெண்கள் இந்தக் காலத்தில் எப்படி யெப்படி இருக்கிறார்கள்! நீ. என்னடி யென்றால் எப்பொழுதும் கண்ணா, முகுந்தா என்று பஜனைப் பாடிக் கொண்டே இருக்கிறாய்!.... ....ஏதாவது நல்ல புத்தகங்களையாவது படிக்கிறாயா என்றால், அதுவுங் கிடையாது............"

"ஏன், நல்ல புத்தகங்களைத் தானே நான் படிக்கிறேன்!"

"என்ன புத்தங்களை?......."

"நாலாயிரப் பிரபந்தம், மகா பாரதம், இராமாயணம் கருடப் புராணம்..........."

"போதும் போதும் கொஞ்சம் சும்மா யிருடி அம்மா! இவை எல்லாம்தான் நல்ல புத்தகங்களா?.........உங்க அப்பாவிற்குப் பிடித்தப் பித்து உனக்கும் பிடித்துக்கொண்டதா?"

"ஏண்டி உன்னைப் போல அவன், இவன், எழுதிய நாவல்களைப் படித்து நாசமாய்ப் போகச் சொல்கிறாயா?"

"ஓகோ, மறந்தே பேசுகிறேனே! பக்த மீரா அல்லவா நீ!........தாலி உன் கழுத்திற்கு வந்ததும் தலை கீழாக மாறப் `போகிறாயே, அப்பொழுது சொல்லுகிறேன், உன் பக்தியை எல்லாம்!''

"என் கழுத்திற்கா தாலி! அடிப் பைத்தியமே, என் கழுத்தில் தாலி என்றுமே ஏறாதடி!.............நான் கன்னியாகவே காலங் கழிக்கப் போகிறேன்! ஆண்களிடம் கொள்ளும் ஆசை அநித்தியமானது! பரமனிடம் கொள்ளும் பாசம், பரிபூர்ணமான ஆனந்தத்தைத் தருவது!" என்று வேதாந்தம் பேசலானாள் மீரா. இவளைத் திருத்தவே முடியாது போலிருக்கிறதே என்று தீர்மானித்து விட்டாள் பத்மா!

மீரா மாசிலாமணி முதலியார் மகள். முதலியார் வைஷ்ணவ பக்தர். புராணத்திலுள்ள மீராவைப் போல தன் மகளை வளர்க்க வேண்டுமென்று ஆசைப் பட்டார். அதனாலேதான் அவளுக்கு மீரா என்ற பெயரு மிட்டார்.

சிறு பெண்ணிலிருந்தே மீராவிற்குக் கண்ணனது பெருமைகளையும் அவனது திருக்கல்யாண குணங்களையும் கூறி வந்தார்! மீராவின் கலக்கமற்ற உள்ளம் கண்ணனையே எந்

நேரமும் நினைத்த வண்ண மிருந்தது. ஆண்களையே வெறுத்தாள், ஆண்டவனையே நேசித்தாள்.

"வான மளந்தான் தாளை நினைந்தே வளருகிறாள் மீரா!" என்று பெருமையாகக் கூறுவார் முதலியார். நல்ல பருவ மடைந்தும் மீரா நந்த பாலனையே இரவும் பகலும் நினைந்து நினைந்து உருகினாள்! இப்படியே ஆண்டுகள் சில சென்றன.

❀ ❀ ❀

காலை மலரப் போகிறது, கடமையைச் செய்ய எழுங்கள் உலகீரே என்று கூறுவதைப் போல, சேவல் தன் தலை நிமிர்த்தி காலைப் பண் பாடியது.

படுக்கையில் புரண்டாள் மீரா. தன் விசாலமானக் கண்களை, மலர் போன்ற கையால் மிருதுவாகத் தடவிக் கொடுத்தாள். தூக்கம் கலைந்தது! எழுந்தாள்! அறையிலே இருந்த கண்ணன் சிலை அருகே சென்றாள்.

"அபலை என்னையே—அறியாப் பருவந்தனில்
அடிமை நீ கொண்டதை—அன்றே மறந்தாயோ
உன்னை யல்லால் இன்பம் உண்டோ கிரிதாரி......"

என்று இசைப் பொழிந்து இரு கைகளாலும் தொழுதாள்! துள்ளி எழுந்து மான் போல் பாய்ந்தோடினாள், மலர்கள் நிறைந்த தோட்டத்திற்கு. கிணற்றிலே நீர் இழுத்தாள்.

"ஆயர் மனைதனில் வெண்ணெய் திருடுவான்
அகமும் கவர்ந்திடுவானே
மாயப் புன்னகை செய்து மயக்கும்
மீராவின் பிரபுதானே"

என்று இனியக் குரலிலே பாடிக் கொண்டே குளித்தாள்! அருகே மலர்ந்திருந்த ஒரு ரோஜா மலரைப் பறித்தாள்.

அதிலே கண்ணனது மலர்ந்த முகத்தைக் கண்டாள்! மகிழ்ச்சிக் கொண்டு மலரைக் கண்களிலே ஒற்றிக் கொண்டாள். தேனீக்களின் ரீங்காரம் குழல் பொழியும் கீதமாய் அவள் காதிற்கு ஒலித்தது. ஓடினாள் வீட்டினுள்ளே. ஈரஆடையை மாற்றிக் கொண்டு, திரும்பவும் கண்ணன் சிலையைத் தொழச் சென்றாள்.

"கனவிலும் உன்னையன்றி நினைவுண்டோ,
கதிஉன் கழலின் நிழலே அன்றோ
வானகம் வையகம் தரும் இன்பங்களை
கருதியதும் உண்டோ!"

இப்படி பக்தியால் உருகிப் பாடினாள்! காலை உணவருந்தி மாடிக்கு ஓடினாள், பக்தி நூற்களைப் படிக்க!

அடுத்த மாடியிலே ஒரு புதிய அழகிய வாலிபன் நிற்பதைக் கண்டாள். யார் அவன்? புதியவனாக இருக்கிறானே, என்று உற்றுப் பார்த்தாள்! அவனும் பார்த்தான்! அவன் வீசிய பார்வை அம்பு, அவள் கண்களைத் துளைத்துக் கொண்டு, அவள் உள்ளத்தில் சென்று தைத்தது!

ஜன்னலின் கதவுகளை மூடி விட்டாள். திருப்பாவையைப் புரட்டினாள், படிக்க! அதிலே அவனது கண்கள் தோற்றமளித்தன! சீ யென்று புத்தகத்தை வீசி யெறிந்து விட்டுப் படுத்துக் கொண்டாள். அவள் உள்ளத்தில் சிறிது அமைதி குலைந்தது அவளுக்கு நன்குப் புலப்பட்டது.

நாட்கள் சில சென்றன. திரும்பவும் ஒரு முறையாகிலும் அந்தக் கண்களைப் பார்ப்போமே என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் தோன்றியது. மெதுவாக ஜன்னலைத் திறந்தாள்! ஆனால் அவன் அங்கே இல்லை! கம்பிகளைப்

பிடித்துக் கொண்டு, ஏக்கத்தோடும் ஏமாற்றத்தோடும் நின்றிருந்தாள். சிறிது நேரம் கழிந்து, அப் பக்கமாய் அழகிய அவ் வாலிபன் வந்தான்! உடனே ஜன்னலின் கதவுகளை மூடி விட்டாள். பிறகு ஒரு கதவை மட்டும் சிறிது திறந்து எட்டிப் பார்த்தாள். திருட்டுத்தனமானச் செயல் செய்கிறோமே என்று அவள் உள்ளம் படபட வென்று அடித்துக் கொண்டது!

அவன் ஒரு ரோஜா மலருக்கு முத்தமிடுவதைக் கண்டாள். அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு புதுமையான உணர்ச்சித் தோன்றியது! அவள் அகத்திலிருந்த அமைதி போயிற்று! புயல் வீச ஆரம்பித்தது!

"அய்யோ, இதென்ன புதுமை அவனைக் காண வேண்டுமென்ற எண்ணமேன் அடிக்கடி என் உள்ளத்தில் தோன்றுகிறது.......கண்ணா!........இது உன் சோதனையா.... ...." என்று எண்ணிக் கண்ணீர் விட்டாள்.......கண்ணன் சிலையைக் கட்டிக் கொண்டு விம்மினாள்!

"கடலில் குளித்தொரு முத்தெடுத்தேன்
கைநழுவ விடுவாயோ கருணையே புரிவாயோ
கருணையே புரிவாயோ—கதியிலேன் கிரிதாரி
துவாரகா புரி வாஸா! சோதனை போதாதோ"

அழுது கொண்டே இப்படிப் பாடினாள்! படுக்கையில் வந்து படுத்தாள். அவன் கண்கள் எங்கும் தோற்றமளித்தன! கண்ணா, என்று கண்களை மூடினாள். தன் கண்களுக்குள்ளேயே அக் கண்கள் தெரிந்தன! இறுக மூடினாள், இன்னும் நன்றாக அக் கண்கள் தெரிந்தன!

இப்படிப் பல நாட்கள் தன் உள்ளத்திற்கு உரமேற்றிப் பார்த்தாள், முடிய வில்லை. அடிக்கடி மறைவாய் இருந்து அவன் முகத்தைக் கண்டு ஆறுதலடைய ஆரம்பித்தாள். நாளாக நாளாக அந்த ஆறுதலும் மறைந்து, ஏதோ ஒருவித மன ஏக்கம் எழ ஆரம்பித்தது.

* * *

தாயி என்பவள், மீரா வீட்டிலும், அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மூர்த்தி வீட்டிலும் சில்லரை வேலைகள் செய்து கொண்டிருந்தாள்.

தாயி மூலமாக, மூர்த்தியைப் பற்றி செய்திகளை யெல்லாம் விசாரித்து அறிந்தாள். மூர்த்தி கல்லூரி மாணவன். விடுமுறைக்குத் தன் அக்காவின் வீட்டிற்கு வந்திருந்தான். அழகிய தோற்றமுள்ளவன், நல்ல சீர்திருத்தக் கொள்கைக்காரன்!

மூர்த்தியும் மீராவைக் குறித்து தாயி இடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்; இப்படியும் ஒரு பெண் இக்காலத்தி லிருப்பாளா, என்று மீராவின் வாலாற்றைக் கேட்டதும் சிரித்தான் மூர்த்தி. இவளை எப்படி மாற்றுவது என்று பல நாட்கள் யோசித்தான். கடைசியில் துணிந்து ஒரு முடிவுக்கு வந்தான்.

ஒரு நாள் கடிதம் எழுதினான். அதனைக் "காதல் நினைவுகள்" என்ற நூலிலே வைத்து, மீராவிடம் தரும்படி தாயி இடம் கொடுத்தான்.

கட்டிலிலே படுத்துக் கொண்டு மீரா எதைக் குறித்தோ யோசித்துக் கொண்டிருந்தாள். தாயி உள்ளே வந்து,

"அடுத்த வீட்டுத் தம்பி இதைக் கொடுத்தார்!" என்று அப் புத்தகத்தை மீராவிடம் கொடுத்து விட்டு, சென்று விட்டாள்.

வாலிபன் அனுப்பிய புத்தகத்தின் பெயரை வாசித்தாள். "காதல் நினைவுகள்" என்ற பெயரைக் கண்டதும், அப் புத்தகத்தைக் கீழே வீசி யெறிந்தாள்! புத்தகத்திலே இருந்த கடிதம் தனியாகத் தரையில் வீழ்ந்து கிடந்தது. கடிதத்தைப் பார்த்தாள் மீரா. அதை எடுக்கச் சென்றாள். அவள் உள்ளம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது.

எடுத்தாள் கடிதத்தை. பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். "திருமதி மீராவிற்கு" என்று அக் கடிதம் ஆரம்பமாயிற்று. அவள் கைகள் நடுங்கின. கடிதத்தை இனி படிப்பதா, வேண்டாமா என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் தோன்றியது.

மீராவின் காதல் உள்ளம் "படி" என்றது! பக்தி உள்ளம், "மீரா, வேண்டாம், கெட்டு விடுவாய்!" என்று பய முறுத்தியது. அவள் அக் கடிதத்தைக் கசக்கி கீழே எறிந்து விட்டுப் படுத்து விட்டாள்.

மூர்த்தி அவள் மனக் கண்முன் தோன்றி புன்னகை புரிந்தான்! கண்களைத் திறந்தாள், காதலனது கண்கள் எங்கும் தெரிந்தன! மூர்த்தி என்ன எழுதி யிருக்கிறான் என்பதை அறிய அவள் உள்ளம் துடிதுடித்தது. அந்த ஆவல் விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே சென்றது! அந்தக் கடிதத்திலே மூர்த்தியின் புன்னகை புரியும் அழகிய முகம் தெரிந்தது! பக்தி உள்ளம் தோற்றது! கடிதத்தைக் குனிந்து எடுத்தாள்! படித்தாள்!

திருமதி மீராவிற்கு,

நான் உனக்கு இக்கடிதமெழுதுவதற்காக மன்னிக்கவும். உன் உள்ளத்தைக் கெடுக்க அல்ல இக்கடிதத்தை நான் தீட்டுவது பாழ்ப்படுத்தப்பட்ட உன் உள்ளத்தை, நச்சு எண்ணங்களைப் புகுத்தப் பட்ட உன் மனதை, தவறான வழியில் சென்று கொண்டிருக்கும் உன் கருத்தைத் திருத்தி, நல்ல வழியிலும், நேர் வழியிலும், செல்லச் செய்ய வேண்டுமென்ற ஒரே எண்ணத்தால்தான் நான் இதனை எழுதலானேன்.

நீ புராணத்திலுள்ள மீராவைப் போல வாழக்கையை நடத்தத் தீர்மானித்து விட்டதாக தாயி சொல்லக் கேட்டேன். மகிழ்ச்சி! அப்படியே நடத்து! நான், மீராவின் கதை உண்மையிலேயே நடந்திருந்தால், எப்படி நடந்திருக்கும் என்பதைக் குறித்து இக்கடிதத்தில் எழுதியுள்ளேன். இதனைப்படித்துப் பார்த்துவிட்டு, பின்னரும் நீ அந்த மீராவைப் போலாக வேண்டுமென்ற எண்ண மிருந்தால், தாராளமாக இருபதாம் நூற்றாண்டு மீராவாய் நீ இரு, அதிலே எனக்கொரு தடையுமில்லை!

மீராவின் கதையை நான் புராணத்திலே படிக்கவில்லை. அதைக் குறித்து வெட்கமோ, வருத்தமோ நான் அடையவுமில்லை. ஆனால் அதனைச் சமீபத்தில்தான் படக் காட்சியில் பார்த்தேன். யோசித்தேன் அக்கதையைக் குறித்து. மீராவின் வரலாறு உண்மையாயின் அது இப்படித் தானிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன்.

மீராவை அவள் பாட்டனர் வளர்த்து வருகிறார். மீரா, கண்ணன் மேல் பக்தி மிக்கவளாய் வளருகிறாள். ரூபகோசு

வாமி என்.ெருரு ரிஷி அவள் வீட்டில் தங்கியிருக்கிறான். கண்ணனது சிறப்பினையும், மேன்மையினையும் அவளுக்குப் போதனைச் செய்கிறான்.

சென்னையிலே, நான் கேள்வி பட்டிருக்கிறேன், பாட்டு வாத்தியார்கள், அந்தணர் வீடுகளிலிருப்பார்கள். கன்னியருக்குக் கானத் தோடேயே, காதலையும் சொல்லித்தருவார்கள் அவர்கள்! இப்படியாக, ராகக் களஞ்சியமாக்குவதற்குப் பதிலாக, பெண்களைக் காமக்களஞ்சியமாக்கி விடுவார்கள் அவர்கள்!

அதுபோலவே, ரூபகோசுவாமியும் மீராவைத் தன் காதற்கிழத்தியாக்கி விட்டான்! மேவார் ராணு விற்கும் மீராவிற்கும் மணம் நடந்தது. மணமான பிறகும் மீராவின் மனம் ரிஷிதந்த இன்பத்தை நினைத்து நினைத்து திரும்பவும் அவனைக் கண்டு, அவன் தரும் இன்பத்தை உண்டு மகிழ வேண்டுமே என்று ஏங்கினாள்!

காதலனைத் திரும்பவும் காண வழி யென்ன என்று யோசித்தாள். கோயில் கட்டினால் ஆண்டிகள் பலர் வருவார்கள், அதிலே ஒருவனாக ரூபகோசுவாமியும் வருவானென்று தீர்மானித்துக் கோயில் கட்டி, அதிலே எந்நேரமும் அவள் பஜனை செய்து கொண்டிருந்தாள்!

நான், உன்னை ஒன்று கேட்கின்றேன் மீரா, கேட்கின்றேனென்றால், நீ பதில் கூறவேண்டுமென்பதற்காக அல்ல, நீயே சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதற்காக!

பக்தியால் தன்னையே மறந்து, கோயிலுக்குச் செல்லும் மீரா, எப்படி உடை உடுத்திச் சென்றாள் என்பதைச் சிறிது நினைவு படுத்திப்பார்!

நெற்றியிலே வேல் போன்ற திலகம், மையிட்டப் புருவங்கள், அழகாய்ச் சீவி அலங்கரிக்கப் பட்ட கூந்தல், தலையாட தானும் ஆடும் லோலக்குகள் காதுகளிலே, மினுமினுப்பான கழுத்திலே பளபளப்பான கற்கள் புதைத்த தங்க நகைகள், காலிலே அணிகள், கையிலே தங்க வளைகள், விரலிலே வைரமோதிரம், வனிதையின் மேனியின் வனப்பு அவ்வளவும் வெளியே தெரியும்படி உடுத்திக் கொண்டிருந்த மெல்லிய அழகிய ஆடை—இது, கண்ணனிடம் தன்னை மறந்த மீராவின் படப்பிடிப்பு!

இவ்வளவு அலங்காரத்தோடு ஒரு அழகி அடிக்கடிக் கோயிலுக்கு வந்து கொண்டிருந்தால், பார்ப்போர் என்ன கூறுவார்கள்! "இறைவனையா நாடி வருகிறாள் இக்கள்ளி, இளைஞரைத்தேடி யன்றோ வருகிறாள்!" என்று தானே கூறுவர். உண்மையும் அதுவாகத்தானே இருக்கும்!

கோயிலிலே மீரா பக்தியாலா பாடினாள்? அல்ல, காமக் கூத்தாடினாள்! ஆதாரத்தோடு கூறுகிறேன், ஆத்திரமடையாமல் கேள்!

காட்டிற்குக் கணவன் சென்றிருந்த நேரத்தில், டில்லியிலிருந்து வந்த தான்ஸேன், மான்ஸிங் என்ற இருவர்களோடும் இரவெல்லாம் கோயிலில் மீரா மெய்ம்மறந்து இருந்தாள்! அன்பளிப்பாக அவர்களிடம் முத்துமாலையைப் பெற்றாள்! இதைக் குறித்து விரிவாய் எழுதலாம், எழுத வேண்டுமென்ற ஆசையும் கூட, ஆனால் உன்மனம் புண்ணாகுமேஎன்ற காரணத்தினால் எதனையும் அதிகமாய் எழுத அஞ்சுகிறேன்.

காட்டிலிருந்து வந்த ராணாவிற்குக் காமுகியின் செயல் தெரிந்து விட்டது. சினந்தான், சீறினான்! கள்ளத்தனமாக

கணவனை விட்டு ஓடினாள் மீரா! தேடினாள் கள்ளக் காதலனை! பிருந்தாவனத்தில் கண்டாள் அவனை! கொண்டாள் மகிழ்ச்சி!

செய்தியை அறிந்தால் சிஷ்யர் கைக் கொட்டி நகைப் பார்களே என்று அஞ்சிய ரூபகோசுவாமி, அவளைத் துவா ரகாபுரிக்கு அழைத்துக் கொண்டு சென்று விட்டான். பூசையின்றி மூடிக்கிடந்த கோயிலைத் திறந்தாள் மீரா! பாழடைந்த அக்கோயில் அவர்களுக்குப் படுக்கை அறையாய்ப் பயன் பட்டது!

ஓடிய மீராவைத் தேடிக் கொண்டு ராணா வந்தான். துவாரகநாதனின் கோயிலிலே ஆண்டியும் மீராவும் ஆனந் தத்திலிருப்பதைக் கண்டான்! ஆத்திரம் கொண்டான்! வாள் எடுத்தான்! வனிதை வெட்டுண்டாள்! இறந்தாள்!

விபசாரி மீரா வெட்டுண்டதை மறைத்து, மணாளன் தொட்டதும் மங்கை, பரந்தாமனுடைய பாதகமலத்தில் ஐக்கியமானாள் என்று வஞ்சகன் ஒருவன், நம்மை மூடர் கள், எதனையும் நம்புவார்கள் என்று எண்ணிக்கொண்டு எழுத, அவன் எண்ணிய வண்ணமே காரியம் கைக்கூடிற்று என்றால், மீரா, நான் சொல்லவே கூச்சப்படுகிறேன், நம்மை முட்டாள்கள் என்று வேற்று இனத்தான் கூறுவதிலே தவறு என்ன இருக்கிறது?

இப்படித்தான் பக்த மீராவின்வரலாறு இருந்திருக்க வேண்டுமென்று எண்ணினேன். ஆகவேதான் உனக்கு இதனை எழுதினேன்

இதனைப் படித்ததும் உன்மனதில் பலபல கேள்விகள் எழும்! நீயே சிறிது சிந்தித்தால் பதிலும் கிடைக்கும்

அன்றி எனக்கெழுதினாலும் பதிலெழுதுகிறேன்............ ஆராய்ச்சிக் கண்கொண்டு, அறிவைத் துணைக் கொண்டு சிந்தித்துப் பார்! ஒருமுறை யல்ல பலமுறை சிந்தித்துப்பார்! தெளிவு பிறக்கும்! நலிவு நீங்கும்!

கண்ணன் சிலையை நீ அணைத்து அணைத்துப் பரவசப் படுவதாகத் தாயி கூறினாள். கேட்டதும் எனக்குச் சிறிப்பு வந்தது! அணைக்க வேண்டியது யாரை என்று தெரியாத அணங்கும் இக்காலத்திலிருக்கிறாளே என்றெண்ணியதும் நான் வாய் விட்டுச்சிரித்து விட்டேன்!

அணைப்பது என்றால் இரண்டு உள்ளங்களும் ஒன்று வது என்று பொருள். அணைக்கும் இருவரது இதயங் களும் பேசினால்தான் இன்பம் பிறக்கும்! இரண்டு இதயங் களில், ஒரு இதயம் பேச, மற்றொரு இதயம் பேசாமலி ருந்தால், துன்பம் பிறக்கும். துன்பம் பிறந்ததோடு மறை யாது, வளரவும் ஆரம்பிக்கும். ஒரு இதயம் பேசாவிட் டாலே துன்ப மென்றால், இதயம் இல்லாத ஒன்றை அணைப் பதென்றால்..........

மீரா, உன் இதயம் பேசும் இதயம்! கண்ணனுக்கோ இதயமே இல்லை! ஏன், நம்ப மாட்டேனென்கிறாயா? வேண்டு மானால் நான் சொல்வதைப் போல் செய்துப் பார்.

கண்ணன் சிலை அருகே போ இப்பொழுது! அணை! கூர்ந்து உணர்ந்து பார்! உன் இதயம் பேசுகிறது அல்லவா? கண்ணா, கண்ணா என்று கொஞ்சுகிறதல்லவா "என்மீரா?" என்று பதிலளிக்கிறதா கண்ணன் இதயம்! இழுத்து அணை த்துப்பார்! நன்றாக உணர்ந்து சொல்! பேசாது! 'சத்திய மாய்' பேசாது! அங்கு இதயமிருந்தால் தானே பேச!

மீரா, இல்லாத ஒன்றை நம்பி உன் இளமையைப் பாழாக் காதே! சிந்தித்துச் சீர்திருந்து. உள்ளம்தெளிந்து, உண்மை அறிந்து, நீ வாழ்வு நடத்த வேண்டுமென்று ஆசைப்படும்,

மூர்த்தி.

கடிதத்தைப் படித்து முடித்தாள் மீரா. பழைய எண் ணங்கள் அடியுடனே அவள் உள்ளத்திலிருந்து மாறுவிட்டா லும் புதிதான ஒரு ஆசை அகத்தே அரும்பி, மலர்ந்தது.

கண்ணன் சிலை அருகே சென்றாள், அணைத்தாள். அவள் இதயம் மட்டும் துடிதுடித்தது! உணர்ந்தாள் மூர்த்தி எழுதியது முற்றும் உண்மை என்பதை மூர்த்தியிடம் கொண்ட ஆசை முன்னைவிட சிறிது அதிகமாகவே அனல் வீச ஆரம்பித்தது அந்த ஆசை, பக்தியை அசைப்பதைப் போலுணர்ந்தாள்!

நாட்கள், மாதங்கள் பறந்தன! புரட்சிக் கரமான கருத் துக்களை ஏந்திய பல கடிதங்கள், மீராவிற்குக் கிடைத்தன, மூர்த்தியிடமிருந்து

இருவர் கண்களும் கலக்கக் கலக்கக் காதலென் னும் புயலெழுந்தது அவள் உள்ளத்தில்! அவனைப் பார்க் கும் போதும் நினைக்கும் போதும் ஒரு இன்ப உணர்ச்சி யினல் அவள் உடல் சிலிர்த்தது. மனதுட் கூடுவாள் அவனை! மகிழ்ச்சி மதுவருந்துவாள் அவள்! குரலில் புதிய பாட் டெழுந்தது!

அவன் இதயமும், என் இதயமும் பேச வேண்டுமே, அந்தப் புதிய இன்பத்தை நான் சுவைக்க வேண்டுமே, என்று அடிக்கடி எண்ணுவாள் அவள் நெஞ்சம் படபடக் கப் படுக்கையில் படுத்துப் புரள்வாள்!

காதலனுக்குக் கடிதமெழுத ஆசைப் பட்டாள். அவள் உள்ளமும் உடலும் உதற ஆரம்பித்தன. துணிந்து எழுதியும் விட்டாள், மூர்த்தியின் ஆசைப்படியே அன்று இரவு சந்திப்பதாக!

இரவு நடு நிசி. காதலியின் வருகைக்காக காதலன் தோட்டத்தில்! திடிதுடிக்கும் உள்ளத்தோடு படுக்கையில் மீரா!

எழுந்தாள்! கதவைத்திறந்தாள் தோட்டத்திற்கு நடந்தாள். மூர்த்தியைக் கண்டதும் அவள் கால்கள் மேலே நடக்க மறுத்தன! அவள் உள்ளம் இன்பக்கடலாயிற்று! அதிலே அச்சம் நாணம் என்ற அலைகள் எழுந்தன!

அருகே வந்தான் மூர்த்தி. கைப்பற்றினன்! மேடையின் அருகே அழைத்துச் சென்றான். "மீரா" என்றான். "ஏன்" என்றாள், தழதழத்தக் குரலிலே! மீரா தன் உடல் காற்றில் மிதப்பதைப் போல உணர்ந்தாள்! "கண்ணா இதயம் பேசிற்று மீரா!" என்றான். தலைகுனிந்தாள் வெட்கத்தால்.

"என் இதயம் பேசுகிறதா, பார், மீரா!" என்று கூறி இன்னும் அருகில சென்றான். மூர்த்தியின் இதயத்தோடு கொஞ்சப்போகிறோம் என்றெண்ணியதும் மீராவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. அணைப்பதாகக் கூறி அணைக்காமல் சும்மா நின்றிருந்தான்! அவள் நெஞ்சம் அவசரத்தால் பதைபதைத்தது! அவள் உள்ளத்தில் புதிய விறுவிறுப்புண்டாயிற்று! தையலின் நிலை தாளமுடியாதாயிற்று! முகம் நிமிர்ந்து அவனை நோக்கினுள். அவள் கண்களில், உள்ளத்திலிருந்த இன்பப்பசி நனகு தெரிந்தது! அணைத்தான் மூர்த்தி! கட்டுக் கடங்காத அவள் உடல் அவ

னது அணைப்பிற்கு அடங்கியது! இரண்டு இதயங்களும் பேசின, கொஞ்சின, அதுமட்டு மல்ல, இரண்டும் ஒன்றாயின

இரவில் இப்படி அடிக்கடிச் சந்தித்து இன்பத்தை அள்ளிப்பருகினர்! 'கண்ணன்' மீராவின் உள்ளத்தைக் காலி செய்து கொடுத்து விட்டான்! மூர்த்தி நிரந்தரமாக அவள் உள்ளத்தில் குடியேறி விட்டான்!

திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்தனர். வழக்கப்படி பெற்றோர் எதிர்ப்பு! காதலர் கண்ணீராலும், உறுதியான சொற்களாலும் அவர்கள் உள்ளங்களை மாற்றினர். மணம் நடந்தேறியது. அன்றொரு நாள் பத்மா விடம் மீரா கூறினாளே, "என் கழுத்தில் தாலி என்றுமே ஏறாதடி!" என்று, அது உண்மை யாயிற்று! சீர் திருத்தத் திருமணம்! புரோகிதனும், தாலியும் புகமுடியாத இடம்!

அன்று பிறந்த நாதம்

மா. இளஞ்செழியன் B.A. (HONS.)

திராவிடர்கள் தனி நாடு பெற்றே தீர வேண்டும். அப்போதுதான் அவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியம், வடநாட்டுச் சுரண்டல், தென்னாட்டு ஆரியத்தின் இரும்புப் பிடி இம் மூன்றினின்றும் விடுதலை பெற முடியும்.

—1938-ல் பெரியார்

பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்பதே நம் முழக்கம். பாகிஸ்தான் இல்லையேல் எட்டுக் கோடி முஸ்லீம்களுக்கும் எதிர் காலத்தில் வாழ்வு இல்லை என்பதே பொருள்.

—1940-ல் ஜின்னா

முஸ்லீம்களுடைய ஆட்சியில் பரம்பரை வீரர்களாகிய நாம் அடிமைகளாய்க் கிடந்துழல்வதா? முடியாது! பாஞ்சால சிங்கங்களே! எழுச்சி பெறுங்கள்—நாம் தனிநாடு பெறுவோம்.

—1944-ல் தாராசிங்

காங்கிரஸ், முஸ்லீம் லீக் இரண்டு கட்சிகளுக்குமே நான் சொல்கிறேன். பட்டாணியர்கள் தங்களுடைய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் புஷ்டு மொழியையும் சிறப்புறச் செய்வதற்கே பட்டாணிஸ்தான் கேட்கிறார்கள். அந்த குறிக்கோள் மிகமிக நேர்மையானது. தயவு செய்து ஒப்புக் கொள்ளுங்கள்

—1947-ல் காந்தியார்

உண்மை, ஒரு நாள் இல்லாவிட்டாலும் இன்னொரு நாள், ஒளி வீசியே தீரும் என்பதைத்தான் இதோ உள்ள வாசகங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

1938-ல் இந்தியா என்னும் இப் பரந்த உப கண்டத்தின் தென்கோடியில் பிறந்த நாதம் இன்று அதன் வடகோடியில் ஒலிக்கிறது.

குறும்புப் பார்வையும் குத்தல் பேச்சும் ஒரு புறம். விஷங் கலந்த வாசகமும், கேலிச் சித்திரமும் ஒரு புறம் பத்திரிகைத் தாக்குதலும் கூட்டுத் தோழர்களின் அலட்சியப் போக்கும் ஒருபுறம். இத்தனையும் பெரியார் இராமசாமியின் காங்களைப் பிடித்துப் பின்னுக்கு இழுக்க, அவரோ சிறிதும் அஞ்சாமல் அத்தனை பிடிப்புகளையும் தன் முழுப் பலத்துடன் உதறித் தள்ளிவிட்டு பிரிவினை என்னும் வெடி குண்டை இந்தியாவின் மீது வீசினார்.

வீசியதும் எவ்வளவு கூக்குரல் கிளம்பிற்று! எத்தனை பேருடைய கடுங் கோபத்திற்கு அவர் உள்ளானார்! அவர் மீது வீசப்பட்ட பாணங்களும், ஏவப்பட்ட அம்புகளும், எறியப்பட்ட ஈட்டிகளும் கொஞ்சமா?

மாற்றுக் கட்சியினர் கிடக்கட்டும், அவருடைய சொந்தக் கட்சியிலேயே கூட சஞ்சலங் கொண்டனர் சிலர். இருந்திருந்து இந்தக் கிழவன் இதைச் சொல்வானேன் என்று மிரட்சியுற்றனர் சிலர். "ஆகிற காரியமா இது? இந்தியாவைத் துண்டு போடுவது என்பது நடக்குமா! என்னமோ கிழவன் கனவு" என்று ஏக்கத்தோடு ஏக்கமாக மொழிந்தவர்களும் உண்டு.

ஒன்றுபட்ட இந்தியாவைப் பிளப்பதா? எங்கள் ஆவி போயினும் அதற்கு யாம் உடன்படோம் என்றனர் தேசியத் தோழர்கள்.

உயிரைக் கொடுத்தேனும் ஒற்றுமையைக் காப்போம். இரத்த ஆறு ஓடினாலும் சரி, எலும்பு மலைகள் குவிந்தாலும் சரி, ஐக்கிய இந்தியா அமைப்பதே எம் இலட்சியம் என்னும் வீர மொழிகளை உதிர்த்தனர், வீரர் கோட்டம் தமக்கே உரியது என்று எண்ணிக் கொண்ட சிலர்.

"தமிழ் நாடு தமிழருக்கே! நல்ல கோஷமப்யா இது! ஏன் எலிவளை எலிகளுக்கே" என்று சொல்வதுதானே என்று ஒரு கூட்டம் கிண்டல் மொழி கூறிற்று.

இந்தியப் பிரிவினை வெறும் கானல்நீர் வேட்டை என்பது அரசியல் வல்லுநர்கள் அன்று தந்த தீர்ப்பு.

இந்தியா உண்மையிலேயே ஒரு நாளைக்குப் பிரிந்து விடும் என்பதை அன்று நினைத்துப் பார்த்தவர்கள்கூட கிடையாது.

இது 1938-ல்!

ஆனால் இன்று?

நிலைமையே மாறிவிட்டது. பிரிவினையே கூடாது என்று சொன்னவர்கள் இன்று பிரிவினைக் காகக் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு போர் முரசு கொட்டுகிறார்கள்.

வடநாட்டார் ஆதிக்கத்தில் தென்னாடு வாழ முடியுமா என்று நாம் அன்று கேட்டதைக் கேலி செய்தவர்கள், "முஸ்லீம்கள் ஆதிக்கத்தில் இந்துக்கள் வாழ முடியாது—ஆகவே இந்து வங்காளம் வேறு, முஸ்லிம் வங்காளம் வேறு" என்று இன்று பரணி பாடுகிறார்கள்.

"திராவிடர்கள் தனி இனம்! அவர்களுடைய கொள்கையும் கோட்பாடும், வாழும் முறையும் வழிபடு நெறியும், கலையும் நாகரிகமும் தனித்தன்மை உடையவை" வடநாட்டார் பண்பாட்டுடன் ஒத்துவராதவை" என்று நாம் உரைத்தகாலை நம்மை அலர் தூற்றிய நண்பர்கள், இன்று நாம் முன் குறிப்பிட்ட அதே காரணங்களைக் காட்டி பட்டாணியத் தனியரசு கேட்கின்றனர்.

சிதைந்த திராவிடம் சீர் பெற வேண்டுமானால் அந்தச் சிதைத்த பனியா—ஆரிய அச்சு முறிய வேண்டும் என்று நாம் விளக்கவுரை பகர்ந்தபோது நம்மை வீணர் என்று பழித்துரைத்த வீரர் கூட்டம், இன்று "பஞ்சாபைத் துண்டு போடு! வங்காளத்தையும் துண்டு போடு! எல்லையிலும் "தனி அரசு திறவு" என்று முழங்குகின்றனர்.

இந்தியாவைப் பிளப்பது பாவம் என்று சொன்ன காந்தியார் காலத்திலேயே பாகிஸ்தானம் உருவாகி விட்டது.

பாகிஸ்தான் வெறும் பகல் கனவு என்று வீர கர்ச்சனை புரிந்த அதே பண்டித நேருதான் பாகிஸ்தானின் தலைநகரம் கராச்சி என்பதை இன்று கேள்விப் படுகிறார்.

வானம் இடிந்து வீழ்ந்தாலும் விழும்; கடல் பொங்கி எழுந்தாலும் எழும்; ஆனால் இந்தியப் பிரிவினை மட்டும் என்றும் நடவாத காரியம் என்று சர்தார் படேல் செய்துவந்த இடி முழக்கத்தின் எதிரொலிகூட இன்னும் மறைய வில்லை. அதற்குள்ளாகத் திருவிதாங்கூர் "சுய நிர்ணயப் பிரகடனம்" செய்து விட்டது.

பசுவை வெட்டுவது போன்ற பாதகமான செயல் பாகிஸ்தான் என்று குட்டிக் கதை கூறிய நண்பர் ஆச்சாரி

யார் கண்முன்னுலேயே "நாட்டுப் பிரிவினை" நடமாடத் தொடங்கிவிட்டது.

பிரிவினை முழக்கத்தைப் பெரியார் இராமசாமி முதன் முதல் எழுப்பியது 1938-ல்.

இது 1947!

1938 க்கும் 1947க்கும் இடையே இருப்பது பத்து ஆண்டுகளே. ஆனால் பத்தே ஆண்டுகளில் இந்த அற்புதமான மாறுதல் நிகழ்ந்து விட்டது.

நினைத்துப் பார்த்தால் நம்பவே முடியவில்லை. ஆனால் உண்மையாகவே, பிரிவினையை அன்று எதிர்த்தவர்கள் இன்று 'முழுக்க முழுக்க' அதை ஒப்புக் கொண்டுவிட்டார்.

நாம் கிளப்பிய நாதம் இன்று நடைமுறைக்கு வந்து விட்டது.

என்றாலும் நாம் மகிழ்வதற்கில்லை. இனத்திற்கு ஓர் இடம் தேவை என்ற நமது தத்துவம் ஒப்புக் கொள்ளப் பட்டு விட்டதே தவிர நம்முடைய இனத்திற்கு உரிய இடம் இன்னும் கிடைக்கவில்லை. நம்முடைய திராவிடஸ்தான் இன்னும் உருவாகவில்லை.

இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்று நாம் சொன்னோம். சொன்ன வண்ணம் "பாகப் பிரிவினை" நடந்து முடிந்துவிட்டது. ஆனால் நம்முடைய பாகம் இன்னும் பிரிக்கப்படவில்லை.

இப்போது ஆங்கிலேயன் வகுத்துள்ள திட்டத்தின் படி திராவிடநாடு "ஏ" தொகுதியில்தான் அதாவது ஹிந்துஸ்தான் என்னும் சிறைச்சாலையில்தான் அடைக்கப் பட்டுவிட்டது.

வடநாட்டு வாணிபம் என்னும் இருப்புச் சங்கிலி திராவிடத்தை இறுகப் பிணித்திருக்கிறது. அந்த இருப்புச் சங்கிலியை நாம் தூள்தூளாய் உடைத்தெறிய வேண்டும்; திராவிடத்தைச் சிறை மீட்க வேண்டும்.

ஹிந்துஸ்தான் சிறைக்கூண்டில் திராவிட நாடு உள்ள மட்டும் அதற்கு வளமான வாழ்வு இருக்க முடியாது. தொழில் வளர்ச்சியின் கடைக் கோடியில் உள்ள திராவிடம் குட்டிக் குபேரர்களின் ஆதிக்கத்தில் உள்ள வடநாட்டுடன் போட்டியிட முடியாது. இதைத் தெரிந்து கொள்ள பெரிய பொருளாதார ஞானம் தேவையில்லை. சாதாரண பொது அறிவு இருந்தால் போதும்.

ஆங்கில ஏகாதிபத்தியம் அஸ்தமித்து விட்டது. அதற்குப் பதில் வடநாட்டு ஏகாதிபத்தியம் அவசர அவசரமாக உருவாக்கப்பட்டு வருகிறது. அதாவது ஆபத்து வெகு வேகமாக நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

மாகாணங்களின் அதிகாரம் அடியோடு குறைக்கப்பட்டு, அளவுக்கு மீறிய பலம் படைத்த "மத்திய சர்க்கார்" நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

திராவிட நாடு கோரிக்கையை இருட்டடிப்புச் செய்யவும், தனி ஆட்சி வேண்டுபவர்களை அடக்கி ஒடுக்கவும் எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இன்றுள்ள நிலை இன்னும் நீடிக்குமானால் திராவிடத்துத் தொழில்வளம் குன்றும்; வாழ்க்கைத்தரம் குறையும்; கலையும் நகரிகமும் சிதறுண்டு போகும்.

இனியும் தாமதிக்க நேரமில்லை.

திராவிடர்கள் அனைவரும் ஒன்று திரண்டே தீர வேண்டும்.

தங்களுக்கிடையே உள்ள சாதி மத சமய வேறுபாடுகள் அனைத்தையும் ஒதுக்கிவைத்துவிடவேண்டும்.

சைவராயினும் சரி, வைணவராயினும் சரி, சமணராயினும் சரி, கிறித்தவராயினும் சரி, பவுத்தராயினும் சரி, நாஸ்திகராயினும் சரி, ஆஸ்திகராயினும் சரி, எல்லாத்திராவிடரும் ஒரே கொடியின்கீழ், ஒரே தலைவரின் கீழ் திராவிடநாடு என்னும் ஒரே இலட்சியத்தின அடிப்படையில் ஒன்று சேர வேண்டும்.

தமிழர், தெலுங்கர், கேரளர், கன்னடர் நால்வரும் கூட்டு முன்னணி அமைக்கவேண்டும். இந்த நான்கு வட்டாரங்களிலுள்ள ஆயிரமாயிரம் இளைஞர்கள் அனைவரும் ஒரே பாசறையில் வந்து கூடவேண்டும். ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் இன எழுச்சிச் சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி ஒருமுகப் படுத்தவேண்டும்.

"சென்னை யாருடையது," "தெலுங்கு நாட்டின் தெற்கு எல்லை எதுவரை இருக்கவேண்டும்" என்பது போன்ற பிரச்சினைகளையெல்லாம் கொஞ்சகாலம் ஒதுக்கி வைத்து விட்டு, தங்கள் முழுப் பலத்தையும் ஆவேசத்தையும் உணர்ச்சியையும் உற்சாகத்தையும் ஹிந்துஸ்தான் சிறையிலிருந்து தென்னாட்டை மீட்கும் பணி ஒன்றிற்கே திராவிடர் அனைவரும் செலவிட வேண்டும்.

திராவிடம் முழுவதையும் ஆங்கிலேயர் வடநாட்டவர்க்குத் "தத்தம்" செய்துவிட்ட இந்த நேரத்தில்— டாடாக்களும் பிர்லாக்களும் கோயங்காக்களும் டால்மி

யாக்களும் நம்மைச் சுரண்டுவது எப்படி என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்—திராவிட இனத்தவர் நால்வருக்கும் எதிர்காலம் ஒன்று உண்டா என்பதே "சந்தேகத்துக் கிடமான சங்கதி" யாகிவிட்ட இந்த நேரத்தில் நமது சிந்தனை முழுதும் வளர்ந்து வரும் வடநாட்டு ஆதிக்கத்தை வெட்டி வீழ்த்துவதிலேயே ஈடுபாடு கொள்ள வேண்டும்.

சுங்கம் பாதுகாப்பு இராணுவம் போக்கு வரவு முதலியவற்றில் மாகாண அரசியலார்க்கு உரிமை இல்லை என்று அழுத்தந் திருத்தமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் திராவிடத்திற்கு இனி வாழ்வு இல்லை என்று தெளிவாகவே சொல்லப்பட்டு விட்டது. திராவிடம் இனி இருப்பதா இறப்பதா என்ற மகத்தான பிரச்சினை எழுந்துள்ள இந்த நேரத்தில் நமது பலத்தை வேறு விவகாரங்களில்—அவை எத்தகையின ஆயினும் சரியே—செலவிடுவது மன்னிக்கமுடியாத குற்றமாகும்.

இனி வடநாட்டிலிருந்து நுகர் பொருள்கள் (Consumer goods) ஏராளமாக இங்கு வந்து குவியும். அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குரிய ஒரே ஒரு ஆயுதம் அவற்றின் மீது வரி விதிப்பது. ஆனால் அந்த ஆயுதம் நமக்குக் கிடையாது என்று ஆங்கிலேயர் திட்டம் நமக்குத் தெரிவிக்கிறது. இந்த ஏற்பாட்டின் விளைவாக நம் நாட்டில் இன்று உள்ள தொழில்கள் சிதையும் புதிய தொழில்களைத் துவக்கவே முடியாது. பிறகென்ன? தென்னாடு வடநாட்டினிடம் பசையுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் கையேந்தி நிற்க நேரிடும். தெற்கு, வடக்குக்கு நிரந்தர அடிமையாகி நிலை

குலைந்து வாழ நேரிடும். இந்த இழிநிலை கூடாது என்றால், திராவிடம் ஒரே குரலில் தனி அரசு தேவை என்று அறிவித்துவிட வேண்டும்.

திராவிட நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் தனித் திராவிட கோரிக்கையை எழுப்பவேண்டும். இன எழுச்சி முரசு கொட்டும் தோழர்கள் அனைவரும் தனித்தனி அமைப்புகள் காண முனைவதில் தங்கள் நினைப்பையும் நேரத்தையும் செலவிடுவதைவிட திராவிட நாடு திராவிடருக்கே என்ற வல்லோசையை வான் முட்ட எழுப்புதல் நன்று.

தமிழர் தெலுங்கர் கேரளர் கன்னடர் ஆகிய இந் நான்கு திராவிட இனத்தவர்க் கிடையே சிறு பூசலும் விளைதற்கு இப்போது இடம் கொடுத்தல் ஆகாது. அப்படி இடம் கொடுப்பது வடநாட்டு ஆதிக்கம் இங்கே நிலைத்து நிற்க வழி செய்வதாகவே முடியும்.

எல்லைப் பிரச்சினையோ அல்லது வேறு பிரச்சினையோ ஏதேனும் ஒன்றில் தமிழரும் தெலுங்கரும் பிற திராவிட இனத்தவரும் தமக்குள் மல்லுக்கு நிற்க வேண்டும்—மாறுபாடு கொள்ள வேண்டும் என்பதே வடநாட்டவர் ஆசை. அப்போதுதானே திராவிடம் என்றென்றும் அவர்கள் இட்ட தாக்கீதுக்கு உட்பட்டு அடங்கிக் கிடக்கும். ஆனால் அந்த ஆசையில் மண்விழும் வண்ணம் ஐக்கிய திராவிட முன்னணி அமைத்துக் காட்ட வேண்டியது திராவிட இனத்தவர் கடமை; சிறப்பாகத் தமிழருடைய கடமை.

அரசியல் ஏகாதிபத்தியத்தின் அரிச்சுவடியே பிரித்தாளும் சூழ்ச்சியில்தான் ஆரம்பிக்கிறது. யூனியன் ஜாக் இந்த உபகண்டத்தில் நுழைந்தது இந்த சூழ்ச்சியின்

துணைக்கொண்டுதான், இப்போது பிர்லா ஜாக் இங்கே பறக்கப் பார்ப்பதும் பழக்கமான இதே பாதை வழியாகத் தான். இந்த உண்மையை உணர்ந்தும் திராவிட இனத் தவர்கள் ஏதேனும் ஒரு காரணங்காட்டி தமக்குள் போரா டிக் கொண்டிருப்பதே "தமக்கு இனிப் புகழும் கருமமும் தருமமும்" என்று கொள்வதாயின், அச் செயல் திராவி டத்தின் வாழ்வை வதைப்பதாகவே முடியும். அப்படி முடியும்போது திராவிடத்தின் ஒரு பகுதி மட்டுமல்ல, திராவிடம் முழுவதும்ம சௌகார் பேட்டையாக மாறி விடும். ஹிந்துஸ்தானில் நாம் என்றென்றும் தங்கிவிட நேரிடும். எத்தக்காரணத்தை முன்னிட்டும் அந்த நிலை ஏற் பட மட்டும் நாம் இடம் கொடுக்கவே கூடாது.

ஏன் கூடாது என்று சிலர் கேட்கலாம். இதோ பதில்: "பத்தாண்டுகள் நாம் இந்துஸ்தானில் இருந்து விடுவோ மானல் அப்புறம் நம்மிடம் இன்றுள்ள சொற்ப இனவு ணர்ச்சி கூட இல்லாது போய்விடும். 1957-ல நாம் தமிழ் தமிழர் தமிழ்நாடு என்று கோஷிக்க மாட்டோம். இந்தி இந்து இந்துஸ்தான் என்று நம்மை யறியாமலே நமது நா முழங்கும்."

இது "குடிஅரசி"ன் குதர்க்கம் அல்ல; "திராவிட நாடு" இதழின் தலைபங்கம் அல்ல; பெரியார் இராமசாமி யின் சொற்பொழிவுக் குறிப்புமல்ல —"தமிழ். முரசு" என்னும் தேசிய ஏடு தமிழர்க்குக் கூறும் அறிவிப்பு.

இறுதியில் "தமிழ்முரசு" கேட்கிறது "இந்த அபா யத்திலிருந்து தமிழர் விடுபட வழி என்ன? அதுதான் இப் போதுள்ள ஒரே கேள்வி."

ஐயமில்லை, அதுதான் இப்போதுள்ள ஒரே கேள்வி.

அந்த "ஒரே கேள்வி"க்கு ஒரே பதில் தான் உண்டு. அந்தப் பதில் இன்று பிறந்ததல்ல; நேற்றுப் பிறந்ததல்ல; 1938-ல் பிறந்தது. பெரியார் இராமசாமியின் தீர்க்கதரிசனம் பத்து ஆண்டுகளுக்கு முன் நமக்குத் தந்தது

அன்று பிறந்த நாதம் அதோ ஒலிக்கிறது—தெளிவாக, திட்டமாக, உள்ளத்தில் உணர்ச்சி யூட்டும் விதமாக:—
"திராவிட நாடு திராவிடருக்கே"

அதுதான் விடை! அது ஒன்றுதான் விடை! அந்த விடை "தமிழ்முரசு"க்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ நாம் அறியோம், ஆனால் "தமிழ் முரசு" கேட்கும் கேள்விக்கு விடை என்னவோ அது ஒன்று தான்!

இந்தியா

உலகில் ஐந்தில் ஒரு பங்கு ஜனத்தொகையைக் கொண்டது. நகரங்களில் பிறக்கும் ஒவ்வொரு 10 குழந்தைகளிலும் 2 ஓராண்டுக்குள்ளாகவே இறந்துவிடுகின்றன. 10ல் 5 குழந்தைகள் 22 ஆண்டுக்குள் இறந்துவிடுகின்றன. சராசரி இந்தியர் வயது 27.

மாங்கனீஸ் உற்பத்தியில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது. உலகில் கிடைக்கும் மைகாவில் ¾ பங்கு இந்தியாவிலிருந்துதான். உயர்தர இரும்பு, நிலக்கரி, குரோமியம் ஆகியவை கிடைக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலேயே மிகப்பெரிய எஃகு தொழிற்சாலை ஜேம்ஷெட்பூரிலுள்ளது.

ஆண்டுதோறும் நானூறு மில்லியன் இந்தியர்களுக்கு மலேரியா காய்ச்சல் வருகிறது. நாற்பத்தைந்து மில்லியன் இந்தியர்களுக்கு கொக்கிப்புழு நோய் வருகிறது. 5 லட்சம் பேர் ஆண்டுதோறும் க்ஷய ரோகத்தினால் இறக்கின்றனர்.

இந்திய உழவர்கள் தினமும் சராசரி இரண்டணாவிலிருந்து 5 அணா வரை சம்பாதிக்கின்றனர். வருடம் ஒன்றுக்கு குறைந்தது 3 மாதங்கள் வேலை இல்லை. ஆண்டு ஒன்றுக்கு சராசரி வருமானம் (பிரிட்டிஷ் இந்தியாவில்) 85 ரூபாய்.

இந்தியாதான் உலகிலேயே மிக அதிகமாக சர்க்கரை, எண்ணெ வித்துக்கள், புகையிலை, சணல், ஆகியவைகளை, உற்பத்தி செய்கின்றது. பருத்தி உற்பத்தியில் உலகில்

இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கின்றது. உலகில் மூன்றில் ஓர் பங்கு தோல் கிடைக்கின்றது.

மூன்றில் இரண்டு பங்கு இந்தியர்களுக்கு போதுமான உணவு கிடையாது. உலகில் மூன்றில் ஒரு பங்கு கால்நடைகள் உள்ளன. 10ல் 7 பசுக்கள் பாலே தருவதில்லை. காஷ்மீர் நாட்டிலே பசுவைக் கொன்றால் 7 ஆண்டு கடுங்காவல்.

காந்தியார், பசுவழிபாட்டை உலகம் திரண்டு எதிர்ப்பினும் ஆதரிப்பேன், என்று சொல்கிறார்.

இப்போது சுமார் நாற்பதுகோடி இந்தியர்கள் உள்ளனர். இனியும் 30 ஆண்டுகளில் எழுபதுகோடி ஆகிவிடுமென கணக்கிடுகின்றனர். கர்ப்பத்தடை இந்து தர்மத்திற்கு பொருந்தாததெனச் சொல்லப்படுகிறது.

1935ல் சர்ச்சில், 10 ஆங்கிலேயரில் இருவர் இந்தியனை நம்பி வாழ்கின்றனர் என அமெரிக்கர்களுக்குச் சொன்னார்.

உலகில் மிகப்பழைய இலக்கியமாகிய வேதம் இந்துக்களுடையது. 10 இந்தியர்களில் 9 பேருக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது.

(ஜான் புல்)

சர்வதேச அரசியல் :—

ஆகஸ்டு முதல் வெளி வருகிறது!

சிந்திக்கத் தூண்டும் சிறந்த பத்திரிகை

போர் வாள்

(தமிழ் வார வெளியீடு)

★

திராவிடர் கழகம், சுயமரியாதை இயக்கம் இவற்றின் கொள்கைகளை முன்னனியில் வைத்து, கதை கவிதை கட்டுரைகளுடன் ஞாயிறுதோறும் வெளி வரும்.

ஆசிரியர்கள்:

காஞ்சி மணிமொழியாளர்

மா. இளஞ்செழியன், B.A. (Hons)

விவரங்களுக்கு:

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

திராவிடன்

(சிறந்த தமிழ் வாரப் பத்திரிகை)

★

ஆசிரியர்: N. V. நடராசன்

விவரங்களுக்கு:

C. D. T. அரசு,

6, சுங்குராம செட்டி தெரு,

G. T. சென்னை.